# கீதாசார்யன



# கீதாசார்யன்-42

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 4 | துர்மதி ௵ | பங்குனி மீ | மார்ச் 82 | பகுதி 6




ஆசிரியர்:

M. A. வேங்கடகிருஷ்ணன், M.A., M.Phil.



**இயக்குநர் குழு :**

T. C. A. ராமானுஜம்
M.A. B.L., I.R.S. (தலைவர்)

N. கணபதி
விற்பனை இயக்குநர்

R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்

P. T. ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு :**

சாண்டில்யன் (தலைவர்)

K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்

Dr. V. V. ராமானுஜம்

S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்

K. E. B. ரங்கராஜன்



7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரூ. 12/-

# அண்ணங்கரஸ்வாமி வாழ்க்கையில் அதிசய நிகழ்ச்சிகள் இரண்டு

(நிகழும் துன்மதி௵ பங்குனி விசாகத்தன்று ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமிக்கு 91 திருநக்ஷத்ரம் நிறைகிறது. அதைமுன்னிட்டு ஸ்ரீஸ்வாமியின் சுயசரிதையிலிருந்து இரண்டு சுவையான நிகழ்ச்சிகளை பிரசுரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

—ஆசிரியர்]

---

அடியேன் 1956-ஆம் வருடத்தில் அச்சிட்டு வெளியிட்ட 'தானே யெழுதிய தன் சரிதை'யில் பக்கம் 140ல் (வைகுண்டவாஸி) அப்ரமேய வித்யாநிதி. ஸ்ரீமதுபயவே. காரப்பங்காடு. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் ஓர் அநுக்ரஹ விசேஷத்தை விரிவாக வரைந்திருந்தேன். (அதன் சுருக்கம் வருமாறு) ஒரு பரியாயம் ஸ்ரீரங்கத்திற்கு விடை கொண்டேன். அங்கு ஸ்ரீமத் சிங்கப்பெருமாள் ஸ்வாமி வானமாமலை மடத்தில் வாஸமாக வெழுந்தருளியிருந்து ஸ்ரீரங்க நாராயண ஜீயர்மடத்தில் காலை மாலைகளில் உபயவேதாந்த ப்ரவசனம் செய்தருளாநின்றார். சில வேளைகள் அங்குத் தங்கியிருந்து கேட்டுக் களிக்கப்பெற்றேன். அப்போது சோதிடத்தில் அபார பாண்டித்யம் உண்டென்று அறியலாயிற்று. ஒருநாள் அந்த ஸ்வாமி அடியேனுடைய ஒரு நோட்புத்தகத்தில் எனது ஜாதகம் குறிக்கப்பட்டிருந்ததைக் கடாக்ஷித்தருளி அதீத அநாகத பலன்களை யெல்லாம் தெரிவித்தருளத் தொடங்கினார். சோதிட நூல்களில்

எத்தனை சுலோகங்களும் பாட்டுக்களுமுண்டோ அத்தனையும் அந்தஸ்வாமிக்கு வாசோவிதேயங்களாயிருந்தன வென்பதை அந்த க்ஷணத்தில் கண்டறிந்து வியந்தேன். அப்போது அந்த ஸ்வாமி அழுத்தம் திருத்தமாக ஒன்று ஸாதித்தார். அதை உலகமெல்லாம் அறியும், (அதாவது—)

"பிரதிவாதி பயங்கரரென்கிற குடிப்பெயர் உமக்கு அந்வர்த்தமாகவே யிருக்கும், உலகத்திலுள்ள வித்வான்கள் யாவரும் தாமாகவே வந்து உம்முடையவாக்கில் மாட்டிக் கொள்வார்கள். இதை நீர் பரிக்ஷையாகப் பார்க்கலாம். வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்கிறவாசியில்லாமல் பெரும்பாலும் எல்லாருமே வந்து உம்மிடம் சிக்கிக்கொள் வதோடு நிற்கமாட்டார்கள்; திக்குமுக்கலாடி நிற்பர்கள். சனிக்கிழமையை செவ்வாய்க் கிழமையாக நீர் சொல்லி விட்டாலும் அது செவ்வாய்க் கிழமையாகவே ஆய்விடும். இதால் நீர் விதண்டாவாதம் செய்வீ ரென்றதாகாது. எத்தனை வித்வான்கள் திரண்டு போராடினாலும் உம்முடைய வாதந்தான் ஸித்தாந்தமாக நிற்கும்" என்று சொல்லி இதற்குப் பல சுலோகங்களும்பாட்டுக்களும் ஸாதித்தார். அதற்கு மேலும் ஸாதித்ததாவது,

"உலகத்தில் சோதிடர்கள் சொல்லுகிறபடி யெல்லாம் பலிக்கிறதென்று நிர்ப்பந்தமில்லை. சில வார்த்தைகள் விபரீதமாவதுமுண்டு. இப்போது நான் உமக்குப் பல விஷயங்கள் சொல்லியிருக்கிறேன், அவற்றில் மற்ற விஷயங் பழுதுபட்டாலும் இந்தவொரு விஷயம் மட்டும் பழுபடவே மாட்டாதென்று சபதம் செய்வேன். நூற்றுக் கணக்கான வித்வான்கள் உம்மிடம் வந்து மாட்டிக் கொண்டே திருவார் கள். நான் கூட ஒருகால் உம்மிடத்தில் மாட்டிக் கொள் வேனோ! என்கிற அச்சமும் உண்டாகி யிருக்கின்றது. ஆனால் எனக்கு விஷயம் தெரிந்து விட்டபடியால் நான் ஜாகரூகனாக வே யிருந்திடுவேன். இன்னும் நான் பத்திருபது வருஷங் களாவது ஜீவித்திருப்பேன். அடிக்கடி நாம் சந்திக்க நேருமே. அவ்வப்போதுகளில் நானே இதைப் பற்றின

யோகக்ஷேம விசாரம் செய்வேன்'' என்றும் ஸாதித்தார். அந்த ஸ்வாமியின் அந்தத் திருவாக்கு அவ்விடத்திலேயே அன்றைக்கே பலிக்க ஆரம்பித்தது. (அஹோபில மடத்து ஆஸ்தான வித்வான் புத்தங்கோட்டம் சீமாச்சார்ய ஸ்வாமியோடு அன்று மாலையே நேர்ந்த வாத விவாதம் தன் சரிதை 142, 143 பக்கங்களில் விரிவாகக் காணத்தக்கது) ஆனல் அந்த விஷயம் இப்போது வேண்டியதில்லை. ஸ்ரீமத் சிங்கப்பெருமாள் ஸ்வாமி ஸாதித்தவற்றில்,

**''சனிக்கிழமையை செவ்வாய்க்கிழமையாக நீர் சொல்லி விட்டாலும் அது செவ்வாய்க்கிழமையாகவே ஆய்விடும்''**

என்கிற ஸூக்தி இதுவரையில் பலிக்க ப்ராப்தமாகவில்லை; இப்போது (1964) நடந்த வைகாசி உத்ஸவத்தில் பலிக்க ப்ராப்தமாயிற்று. அது உண்மையில் அதிசயிக்கத்தக்கதாகவே யிருந்தது.

விஷய மென்னவென்றல், ஸ்ரீராமாநுஜன் 185-ல் (பக்கம் 5ல்) **''தேவப்பெருமாள் வைசாகோத்ஸவம்''** என்று மகுடம் புனைந்த சிறு வியாஸம் வெளியிட்டிருக்கிறேன். இதனை எல்லீரும் வாசித்திருக்கிறீர்கள். அதில்

> ''21-5-64 வியாழக்கிழமையன்று செல்வருத்ஸவம். வெள்ளிக்கிழமை திருமுனைத் திருநாள். சனிக்கிழமை சேனையர் கோனுத்ஸவம். ஞாயிற்றுக்கிழமை த்வஜாரோஹணம். செவ்வாய்க்கிழமை பெரியதிருவடி. ஞாயிற்றுக் கிழமை திருத்தேர்''

என்றெழுதினேன். பெரிய திருவடி உத்ஸவம் வரையில் கிழமைக் குறிப்பு ஸரி. ஏழாவது திருநாளாகிய திருத்தேர் சனிக்கிழமையே யொழிய ஞாயிற்றுக்கிழமையன்று. 'ஆனல் ஞாயிற்றுக்கிழமை யென்று அடியேனு லெழுதப்பட்டு அச்சேறி விட்டது. உத்ஸவத்திற்கு வந்திருந்த பலர் ''திருத்தேர் சனிக்கிழமை யல்லவா? ஞாயிற்றுக்கிழமை எப்படி?'' என்று கருடஸேவையன்று கேட்டார்கள். 'அப்படி நான் தவருக எழுதியிருக்கமாட்டேனே' என்றேன்.

'யாம் பலர் கவனித்துப் பார்த்தோம்; தவருகவே விழுந்திருக்கிறது' என்ருர்கள். அதே சமயத்தில் உடனிருந்த பல பெரியார்கள் 'தேவரீருடைய வாக்கு ஒருகாலும் பழுது படாது' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள், நம் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேருஜீ திடீரென்று காலமாஞரென்கிற துக்ககரமான செய்தி எட்டியது. அதற்காகத் தேவப் பெருமாளுடையஉத்ஸவம் அறவே நின்றுவிட்டது. அதனுல் சனிக்கிழமை நடக்க வேண்டிய திருத்தேர் ஞாயிற்றுக்கிழமை தான் நடந்தது. சிங்கப்பெருமாள் ஸ்வாமி திருவாக்கில் "............அது செவ்வாய்க்கிழமையே ஆய்விடும்" என்றிருப்பதனுல் திருத்தேருத்ஸவம் மூன்றுநாள் நடைபெற்று செவ்வாய்க் கிழமையன்றே தலைக்கட்டிற்று.

ஞாயிற்றுக்கிழமை த்வஜாரோஹண மென்றெழுதிய கையினுல் ஞாயிற்றுக் கிழமை திருத்தேர் என்றெழுத ப்ரஸக்தியே இடையாது. 'இதுவென் புகுந்ததிங் கந்தோ!' என்ற நாச்சியார் திருமொழியை நினைப்பூட்டும்படி இந்த ஸ்காலித்யம் எப்படி வந்து புகுந்ததென்று நினைத்திருக்கையில், (ஜயத்ரதவதத்தில்) அர்ஜுனனுடைய வார்த்தையை மெய்ப்பிக்கைக்காகப் பகலை இரவாக்கின து க்ருத்ரிம சேஷ்டையினுல். அங்ஙனன்றிக்கே பேரருளாளன் மெய்யாகவே சனிக்கிழமை திருத்தேரை ஞாயிறு திருத்தேராக்கினதுபற்றி அவனுடைய திருவருள் மிக மிக வியக்கத் தக்கதே யாயிற்று. ... — — ...

திருநாடு சென்றவர்கள் மீள்வதில்லை யென்ற நற் கொள்கைக்கு மாருக அடியேன் மீண்டு வந்ததோர் அதிசய வார்த்தையை ஆப்தர்களறிய விஜ்ஞாபிக்கிறேன். நாதத்வாராவிலிருந்து ஆவணி மாதப் பிறப்பன்று (17—8—58) மாலை ஸபரிவாரனுய்ப் புறப்பட்டு வித்தபூரென்கிற மாத்ருகயா க்ஷேத்திரம் 'செல்லா நின்றேன். ஸாயம் ஆறரை மணிக்கு ரயில் ஏறியாயிற்று. எமக்கு ஸ்பெஷல் போகி

வண்டி யிருந்தாலும் ஆக்ராவிலிருந்து மீட்டர் கேஜ் பாதைக்கு ஏற்பச் சிறு வண்டித் தொடர் அமைந்ததனால் அதில் பெருந்திரளோடு கூடியிருக்கப் பாங்கில்லாமல் சௌகர்யத்தை யுத்தேசித்து வேறொரு வண்டியில் இருந்து வந்தேன். அதிலும் நம்மவர்கள் பலர் உடனிருந்தார்கள். அதில் கூட்டம் அதிகமாக ஏற்பட்டதனால் நம்முடைய ஸ்பெஷல் வண்டிக்கே போய்ச் சேருவோமென்றெண்ணி அந்த வண்டியிலிருந்து இறங்கிவிட்டேன். அந்த ஸ்டேஷன் சிறியதாகையாலே நமது ஸ்பெஷல் வண்டித்தொடர் ப்ளாட்பாரத்தைக் கடந்து அப்பால் சிறிது தூரத்தில் (என்ஜின் பக்கத்தில்) நின்றிருந்தது. அவ்வளவு தூரம் நான் நடந்து செல்வதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது. அப்போது இரவு பத்தே கால் மணி. எப்படியாவது நமது வண்டியில் ஏறிவிட வேணுமென்னு மாசையினால் சிறிது வேகமாகவே நடந்து சென்று வண்டியின் வெளியிலுள்ள கீழ்ப் படியின் மீதேறி இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டேன். இதுவோ சிறு வண்டித்தொடர்; அதற்கேற்பப் படியும் மிகச் சிறிது. வண்டித் தொடரோ கனவேகமாக ஓடுகின்றது. நமது ஸ்பெஷல் வண்டிகள் நான்கில் ஏறக்குறைய எண்பது பேர்கள் சயனித்திருக்கிறார்கள். வெளிப்படியில் நின்றபடியே கதவைத் திறவுங்களென்று நான் கத்துகிறேன். உயிர்ப்பிச்சை கொடுங்களென்றும் கூச்சலிடுகிறேன். அந்த பயங்கரமான கூக்குரல் கேட்டுப் பலர் கண்விழித்தெழுந்து ஜன்னல் வழியாய் என்னைப் பார்த்துங்கூட ஒருவராலும் கதவைத் திறக்க முடியவில்லை. எதிர்ப் பக்கத்தில் மட்டும் திறக்கும் வழி வைத்துக்கொண்டு இந்தப் பக்கத்தைப் பூட்டியே யிருந்தபடியாலும், எளிதில் பேர்க்க முடியாத கனத்த மூட்டைகளை வழியடைய அடுக்கியிருந்தபடியாலும் கதவு திறக்க முடியாமலே போயிற்று. ஸ்டேஷன் விட்டு ஐந்தாறு மைல் தூரத்திற்கு மேல் வண்டி போய்க்கொண்டிருக்கிறது. அந்த ஸமயத்தில் வெளியில் நான் எப்படி நிற்கிறேன், எப்படி நான் வந்தேன் என்பது

உள்ளிருப்பவர்களுக்குப் புரியவில்லை. எனக்கோ கையிலும் காலிலும் வலி மாண்டு விட்டது. கால் சரிவுற்றது. கையும் தளர்ந்து விட்டது. கீழே சரிந்து விழவேண்டிய நிலைமையாய் விட்டது. அந்த விடத்தில் கீழ்ப்பாகத்தை நோக்குக்கால் கிடுகிடு பாதாளமாயிருக்கின்றது. நானே புத்திபூர்வமாகக் குதித்தாலும் அவசரத்தில் சரிந்து விழுந்தாலும் ஒரு அஸ்தி கண்டங்கூட ஒருவர் கையிலும் கிடைக்க வழியிராது. பகவான் நமக்கு இப்படிப்பட்ட அபம்ருத்யுவையா தலையி லெழுதினென்று எண்ணுதலை பலவு மெண்ணியாயிற்று. த்வயாநுஸந்தானமும் ஆசார்ய பாதாரவிந்த த்யானமும் செய்தாயிற்று. ஒரு மணி யவகாசத்தில் க்ரமேண நினைத் தாக வேண்டிய பலபல விஷயங்களை ஒரே நிமிஷத்தில் நினைத்து விட்டேன். கடைசியான நினைவை மட்டும் இங்கு விஜ்ஞாபிக்கிறேன். வராஹ சரமச்லோகப்படி அப்போதைக் இப்போதே சொல்லி வைத்தே னென்றிருப்பார்க்கு அந்தி மஸ்ம்ருதி ஆவச்யகமன்று 'என்று ஸம்ப்ரதாயார்த்தமிருந் தாலும் அந்திம க்ஷணத்தில் நமக்கு மணவாளமாமுனிகளின் திருவடி சிந்தனை ப்ராப்தமாகுமா வென்று அடியேன் அடிக் கடி நினைப்பதுண்டு. அந்த சிந்தனையோடு இப்போது நமக்கு அவஸானம் நேருகின்றதே யென்று ஒரு மஹத்தான ஸந்தோஷ முண்டாயிற்று. இன்னமும் ஒன்று நினைத்தேன்; (அதாவது) "**க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரிய மிவாதிதிம்**" என்று உள்ளது; மணவாளமாமுனிகளே! அடியேன் க்ருதக்ருத்யனாக இல்லையே! இன்னமும் எவ்வள வோ கர்த்தவ்ய சேஷமிருப்பதாக நினைத்திருக்கு மடியேனை இப்படி அபம்ருத்யுவுக்கு ஆளாக்கவோ திருவுள்ளமாயிற்று! என்று இதுதான் அந்திம ஸ்ம்ருதியாக நிகழ்ந்தது. அதே க்ஷணத்தில் ஒரு உபாயம் ஸ்புரித்தது. "அபாயம் நேர்ந் தால் வண்டியை நிறுத்த சங்கிலியைப் பிடித்திழு" என்று வண்டிதோறும் பிரசுரம் செய்யப்பட்டிருப்பது நினைவுக்கு வந்தது. உள்ளேயிருப்பவர்களை நோக்கி 'சங்கிலியை பிடித் திழுங்கள்' என்று கத்தினேன். நம்முடைய க்ரந்தமாலா

ஏறுண்டாகிய சென்னை ஜி. ரங்கையா நாயுடு சங்கிலியைப் பிடித்திழுத்தும் வண்டி நிற்கவில்லை. வண்டியோ ஒரு நிமிஷத்தில் ஒரு மைல் ஓடுகின்றது- எப்படி நான் தரித்து நின்றேனென்பது எனக்கே தெரியவில்லை. ப்ரஹ்மாஸ்த்ரமும் வாய் மடிந்ததே யென்று துடிக்கிறேன். க்ருஷ்ணகிரி வெங்கடலக்ஷ்மியம்மாளென்பவள் ஹாஹா வென்று அலறிக்கொண்டே சங்கிலியைப் பிடித்துக் கொண்டு தொங்கலாடி நிற்க உடனே வண்டி நின்றது. என்னுடைய ஆவியும் நிலையில் நின்றது. அந்த அம்மாள் ப்ரதிவாதி பயங்கராசார்ய ஸமாச்ரயணம் பெற்றவளாகையாலே உயிர்ப் பிச்சை யளிக்கும் பாக்கியம் இவளுக்கு எட்டியதுபோலும்; வண்டி நின்றவுடனே நான் கீழேயிறங்கிவிட்டேன். விரஜா தீரத்தில் நின்று யிறங்கினேனென்பதில் ஐயமில்லை. சில அதிகாரிகள் ஓடி வந்து என்னை கார்டு வண்டியில் ஏற்றிவிட உடனே வண்டி புறப்பட்டு விட்டது. அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்ற பிறகு ரயில்வே அதிகாரிகள் செய்ய வேண்டிய விசாரணையைச் செய்து தெளிவுடன் சென்றார்கள் மறு நாள் காலை எட்டு மணிக்கு வித்தநூர் வந்து சேர்ந்தோம். பக்தன் பத்திரிகையாசிரியரான ஸ்ரீமான் M. O. அழகிய சிங்கராசாரியர் ஸ்ரீஜயந்தி மலராக வெளியிடப்படும் பக்தனுக்கு ஒரு வியாஸ மெழுதியனுப்பவேணு மென்று அடிக்கடி கடிதமெழுதி வந்தார். இந்த ஸம்பவத்திற்கு முன்னே [நாதத்வாராவிலிருந்து புறப்பட்ட பின்பு] ரயில் வண்டியிலேயே அந்த வியாஸ மெழுத ஆரம்பித்து அதற்கு ''பிறந்தவாறும் வளர்ந்தவாறும்'' என மகுடம் வைத்து இரண்டொரு பக்கமே யெழுதினேன். அப்போது நானேறியிருந்த வண்டியில் போதுமான ஸௌகரியம் இல்லாதிருந்ததனால் எழுதுவதை நிறுத்தி காகிதச் சுருளை இடுப்பில் சொருகியிருந்தேன். மேலே விவரித்த ஆபத்தை அநுபவித்த காலத்தில் அந்த காகிதச் சுருளை இடுப்பிலேயே யிருந்தது. என்னுடைய பலவு மெண்ணின காலத்தில் ''வியாஸத்திற்கு மகுடம் வைத்ததற் கேற்ப நம்முடைய பிறந்தவாறும் வளர்ந்தவாறும் இப்படியா ஆயிற்று! என்கிற எண்ணமும் நிகழ்ந்தது.

# ஸ்ரீ ராமானுஜர்

ஸ்ரீ ராமானுஜருக்கு வயோதிகம் வந்ததும் காவேரி நீராட்டத்துக்கு யாராவது கையைப் :பிடித்துக் கொண்டு போகும் நிலை ஏற்பட்டது. நீராட்டத்துக்குப் போகும் போது தமது மருமகனும் சிஷ்டனை பிராம்மணனுமான முதலியாண்டான்கையைப் பிடித்துக் கொண்டு போனார். நீராடிய பிறகு வில்லிதாசன் கையைப்பிடித்துக் கொண்டு மடத்துக்குத் திரும்பினார். இந்த அனாசாரத்தை சகிக்க முடியாத மடத்து அந்தணர்கள் முணுமுணுத்தார்கள். இது இராமானுசர் காதிலும் விழுந்தது.

## சாண்டில்யன்

ஒருநாள் ஸ்ரீ ராமானுஜர் வில்லியை அழைத்து மடத்து பிராம்மணர்கள் மடத்துத் தாழ்வரையில் உலர்த்தியிருந்த வேஷ்டி [ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சாண்கிழித்து விடும்படி பணித்தார். தாசன் உடனே செய்துமுடித்தான். வேஷ்டிகள் கிழிக்கப்பட்டிருந்ததைக் கண்ட பிராம்மணர் கள் கூச்சலிட்டார்கள். வாயில் வராத வார்த்தைகளைச் சொல்லி தூற்றினார்கள். ஸ்ரீ ராமானுஜரிடம் புகாரும் செய்தார்கள். விசாரிப்பதாக ஸ்ரீ ராமானுஜர் சொன்னார். சில நாட்கள் கழித்து அந்த அந்தணர்களை அழைத்து “மடத்தில் பணமில்லை. பொன்னாச்சியின் கால்களில் சோழ மன்னன் அளித்த இரண்டு சிலம்புகள் இருக்கின்றன. அவள் தூங்கும்போது அவற்றைக் கழற்றிக் கொணர்ந்தால் இன்னும் இரண்டு வருஷங்கள் மடத்தை சமாளிக்கலாம்”

என்றார். ''வில்லி இருக்கிறானே. பார்த்து விடுவானே'' என்று அந்தணர்கள் அஞ்சினார்கள்.

''பயப்படவேண்டாம். அவனை இங்கு நிறுத்திக் கொள்கிறேன்'' என்றார் இராமானுசர்.

அன்றிரவு இராமானுசர் ஆணைப்படி வில்லி மடத்தி லேயே தங்கிவிட்டான். அந்தணர் அவன் குடிசைக்கு விரைந்தனர். குடிசைக் கதவை மெள்ள திறந்து பார்த் தார்கள். பொன்னாச்சி கதவுக்கு முதுகைக்காட்டி ஒருக் களித்துப் படுத்திருந்தாள். அந்தணர்கள் ஓசைப்படாமல் உள்ளே நுழைந்து ஒருகால் சிலம்பைக் கழற்றிவிட்டார்கள். இன்னொருகால் அடியிலிருந்ததால் என்னசெய்வது என்று தெரியாமல் விழித்தார்கள். அவர்கள் வருவதை முன்ன தாகவே பார்த்துவிட்ட பொன்னாச்சி இன்னொரு சிலம் பையும் கழற்றிக் கொள்ளட்டும் என்று மேலேயிருந்த காலை புரட்டினாள். அவள் விழித்துக்கொண்டதாக நினைத்து அந்தணர் இருவரும் ஓடிவிட்டார்கள். அங்கு ஓட்டம் பிடித்தவர்கள் மடத்துக்கு வந்து ஸ்ரீ ராமானுஜரிடம் விஷயத்தைச் சொன்னார்கள். ''பரவாயில்லை. இந்த ஒரு சிலம்பு ஒரு வருஷ செலவுக்குப் போதும்'' என்று அவர்கள் செயலை சிலாகித்தார். அவர்கள் போன பின்பு மடத்தில் வேறு இடத்தில் உறங்கிக் கொண்டிருந்த வில்லிதாசனை ஸ்ரீ ராமானுஜர் எழுப்பி வீட்டுக்குப் போக உத்தர வளித்தார்.

வீட்டுக்கு வந்த வில்லிதாசன் பொன்னாச்சி துயரத் துடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். ''பொன்னாச்சி! ஏன் இப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டான். விஷயத்தை பொன்னாச்சி விளக்கினாள்.

அதைக் கேட்ட வில்லிதாசன் எரிமலையாக மாறினான். ''அடி பாவி! பாகவத அபசாரத்தை சம்பாதித்து

விட்டாயே? அவர்கள் வருவது தெரிந்ததும் நீ எழுந்து அவர்களை வணங்கி, என்ன வேண்டும் என விசாரித்து, வேண்டியதைக் கொடுக்காமல், தூங்குவதுபோல் பாசாங்கு செய்வதென்ன? காலை தள்ளிப் போடுவதென்ன?'' என்று சீறினன். ''இனி என்னுடன் பேசாதே'' என்று கூறி சாப்பிடாமல் படுத்துவிட்டான். அவன் சாப்பிடாததால் அவளும் சாப்பிடவில்லை.

மூன்று நாட்கள் கடந்தன. இருவரும் மூன்று நாட்களும் பட்டினி. இருவர் கண்களும் பஞ்சடைந்து கிடந்தன. அன்று ஸ்ரீ ராமனுஜர் காலட்சேபம் செய்தபோது அத்தனை பிராம்மணர்களும் கூடியிருந்த சதஸில் வில்லிதாஸனைப் பார்த்து ''வில்லி! நீ என் இப்படியிருக்கிருய்? பொன்னாச்சிக்குந்தான் என்ன உடம்பு?'' என்று விசாரித்தார்.

வில்லிதாசன் நடந்ததைச் சொன்னன். ஸ்ரீ ராமானுஜர் பிராம்மணர்களைப் பார்த்துச் சொன்னர் ''பிரம்மணோத்தமர்களே! உங்கள் துணிகளில் சிறிதளவு கிழிந்தபோது வேதம் சொல்லும் வாயால் எத்தனை கேவலமான வார்த்தைகளைப் பேசினீர்கள். வில்லிதாசன் நிலையைப் பாருங்கள். அவன் தான் ஸ்ரீ வைஷ்ணவன். அவன் ஆத்ம சுத்தியைக் கண்டு தான் நீராட்டத்துக்கு பிறகு அவன் கையைப் பிடித்துக் கொண்டு வருகிறேன். உங்கள் ஆத்மாக்கள் அதே மாதிரி சுத்தமாகும்போது உங்கள் கைகளையும் பிடித்துக் கொள்கிறேன்'' என்ருர்.

இப்படி சாதி வித்தியாசமற்ற வாழ்க்கையைப் பார்த்தவர் ஸ்ரீராமானுஜர். அது மட்டுமல்ல. தம்மிடம் உபந்நியாசங்களைக் கேட்டதால் பரிபக்குவமடைந்துவிட்ட பொன்னாச்சியை மிக உயர்ந்தவளாக மதித்தார். மடத்தைச் சேர்ந்த இருவரிடை யார் உயர்ந்த ஆசாரியன் என்று சர்ச்சை ஏற்பட்டது. அவர்கள் அதுபற்றி சந்தேகம் தீர்த்துக்கொள்ள ஸ்ரீராமானுஜரை அணுகி 'ஸ்வாமி! நமது

வேத சாஸ்திரங்கள், பரம்பரை முதலிய எந்தனையோ ரிஷிகளேயும் ஆசார்யர்களேயும் சொல்கின்றன. அவர்களில் யாரைப் பின்பற்றுவது?" என்று சந்தேகம் கேட்டார்கள்.

ஸ்ரீராமானுஜர் "இதைப்பற்றி பொன்னுச்சியாரிடம் கேளுங்கள்'' என்று சொன்னர்.

போயும் போயும் தாசியிடமா சந்தேகம் கேட்க வேணும் என்று நினைத்தாலும் சொல்லமுடியாதவர்களாய் இருவரும் பொன்னுச்சியின் குடிசைக்கு சென்று அவளை சந்தேகம் கேட்டார்கள். அவள் சிறிது சிந்தித்தாள். தனது கூந்தலை அவிழ்த்துவிட்டாள். பிறகு அதை எடுத்து முடிந்து கொண்டாள். கீழே கிடந்த ஒரு காவி நூலை எடுத்துக் குழல் மீது வைத்துக் கொண்டாள். உள்ளே சென்று கதவை சாத்திக் கொண்டாள்.

ஒரு வார்த்தைகூட பதில் சொல்லாமல் அவள் உள்ளே போய்விட்டதைப் பார்த்த இருவரும் ''என்ன திமிர் பிடித்தவள்?'' என்று நினைத்து திரும்ப மடத்துக்கு வந்து ஸ்ரீ ராமானுஜரை சேவித்து நின்றார்கள்.

''என்ன சொன்னள்?'' என்று கேட்டார் ஸ்ரீ ராமானுஜர்.

''ஏதும் சொல்லவில்லை'' என்று இருவரில் ஒருவர் பதில் சொன்னர்.

''பேசவே இல்லை. திமிர் பிடித்தவள்'' என்றார் இன்னொருவர்.

''என்ன நடந்தது?'' என்று ஸ்ரீ ராமானுஜர் கேட்டார். நடந்ததைச் சொன்னர்கள்.

ஸ்ரீ ராமானுஜர் புன்முறுவல் கொண்டு ''உங்கள் கேள்விக்குத்தான் பதில் சொல்லிவிட்டாளே'' என்றார்.

இருவருக்கும் வியப்பு அதிகமாகவே ஸ்ரீ ராமானுஜர் விளக்கினர், ''குழலை விரித்துவிட்டதால் குழலில் ஆயிரக்

கணக்கான மயிரிழைகள் இருப்பது போல் ஆசார்யர்களும் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள் என்பதை அறிவுறுத்தினான். அதை எடுத்து முடிந்ததால், இத்தனை மயிரிழைகள் இருந்தாலும் முடிந்தால் தேறக்கூடியது ஒன்றே ஆவது போல் ஒரு ஆசார்யனை பின்பற்றக்கூடியவர் என்று சுட்டிக்காட்டினான்'' என்றார் ஸ்ரீ ராமானுஜர்.

''குழலுக்கு மேலே ஒரு காவி நூலை வைத்தானே எதற்கு?'' என்று கேள்வியை எழுப்பினர் இருவரும்.

ஸ்ரீ ராமானுஜர் சிறிது சங்கடத்துக்குள்ளானார். ''அது காஷாயம் தரித்த அடியேனைக்குறிக்கும். ஆனால் அதை நீங்கள் ஒப்புக் கொள்ள அவசியமில்லை'' என்றார் முடிவில்.

இரு அந்தணர்களும் ஸ்ரீ ராமானுஜர், திருவடிகளில் விழுந்து வணங்கினர். ''பொன்னாச்சியின் ஞானம் எங்களுக்கில்லையே'' என்று ஏங்கினர். ஸ்ரீ ராமானுஜ மதத்தில் தாசியும் அத்தனை சிறப்பாக உயர்ந்தாள்.

இப்பேர்ப்பட்ட ஸ்ரீ ராமானுஜர் உலகம் ஒன்றுபட்டது, உயிரினங்களில் பேதம் கிடையாது என்பதை சொல்லியும் காட்டினார், செய்தும் காட்டினார்.

ஸ்ரீ ராமானுஜர் வாழ்வுக்கு வழிகாட்டியவர். இந்த உலகம் மித்யை, பொய்யானது என்பதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. இந்த உலகம் சத்யம், இருக்கத்தான் இருக்கிறது என்றுசொன்னார். நாம்தான் கடவுள், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுதான், என்ற வாதத்தை அவர் மறுத்தார். அத்வைத சித்தாந்தத்தை அவர் அடியோடு ஒப்புக் கொள்ளவுமில்லை, அடியோடு மறுக்கவுமில்லை. விசிஷ்ட அத்வைதம் என்று மதஸ்தாபனம் செய்தார். நீ கடவுள் ஆகமுடியாது, ஆனால் கடவுளி

லிருந்து வேறுபட்டும் இருக்கமுடியாது. பிரம்மத்துக்குக் கைங்கர்யம் செய்வதே ஆத்ம லக்ஷணம் என்பது ஸ்ரீ ராமானுஜர் கொள்கை.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்ற அத்வைத சித்தாந்தத்துக்கும், இரண்டும் வெவ்வேறு என்ற த்வைத சித்தாந்தத்துக்கும் இடையே நிற்பது ஸ்ரீ ராமானுஜரின் விசிஷ்டாத்வைத சித்தாந்தம். The Golden Mean என்று ஆங்கிலத்தில் சொல்வதுபோல் இடையே நிற்கும் ஸ்ரீ ராமானுஜ சித்தாந்தம் பொன்போன்றது. அந்த பொன்னின் ஒளியை நமது மத, மாத்சரியங்களால், பிரிவினை எண்ணப் பேய்களால் மாசுபடுத்தாதிருப்பது மனித ஜன்மம் எடுத்த நமது கடமை.

வைஷ்ணவர்கள் பூஜைக்காலங்களில் ராமானுஜார்ய திவ்யாக்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம், அதாவது ஸ்ரீராமானுஜரின் 'நல்ல கட்டளைகள் [வளரட்டும் நன்றாக வளரட்டும், என்று சொல்வது வழக்கம். திவ்யமான அந்த கட்டளைகள்தான் என்ன? மோஸஸின் Ten Commandments, அதாவது பத்துக் கட்டளைகளைப்பற்றி கேட்டிருப்பீர்கள். உன்னதமான கட்டளைகள் அவை. அதே போல் ஸ்ரீ ராமானுஜரும் கடைசி காலத்தில் பத்துக் கட்டளைகளை ஸ்ரீ வைஷ்ணவ உலகத்துக்குப் பிறப்பித்தார். அவை வருமாறு :

1. பகவானிடம் சரணடைந்தபின் உனது பிற்காலத்தைப்பற்றி நினைக்கக்கூடாது. ஏனென்றால் உன் பிற்காலம் அவன் கையில் இருக்கிறது.

2. உனது தற்காலம் உனதுமுன்வினையின் விளைவு ஆகவே அதைப்பற்றி வருந்தாதே, கவலைப்படாதே. ஸ்ரீ வைஷ்ணவன் தனது நிகழ் காலத்தைப்பற்றியோ பிற்காலத்தைப்பற்றியோ கவலைப்படாமல் வாழ்க்கை நடத்த வேண்டும்.

3. உன் கடமையை பலனை எண்ணிச் செய்யாதே.

4. எதைச் செய்தாலும் அதை ஆண்டவனுக்குச் செய்யும் பணியாக நினைத்துக் கொள்.

5. ஸ்ரீபாஷ்யத்தைப் படித்து அதைப் பிரசாரம் செய். இது பகவானுக்கு இஷ்டமானது. இது முடியாவிட்டால்

6. ஸ்ரீ சடகோபனுடைய திருவாய்மொழியையும், மற்ற அருளிச் செயல்களையும் படித்து தகுந்த சீடர்களுக்கு சொல்லிவை.

7. பசித்த ஏழைகளுக்கு உணவளித்தல், கோவில்களுக்கு விளக்கேற்றுதல், பெருமாளுக்கு மாலை கட்டுதல் முதலிய பகவத் கைங்கர்யங்களை செய்வதில் காலத்தைக் கழி. அல்லது

8. யாதவாத்ரி எனக்கு பிடித்த இடம். அதில் ஒரு குடிசை போட்டுக் கொண்டு அமைதியாக வாழ்ந்துகொள். பக்தி கலந்த எளிய வாழ்க்கைக்கு இணை எதுவும் கிடையாது. இது முடியாதென்றால்.

9. இருக்கிற இடத்தில் இருந்து கொண்டு உன்சுமைகளை பகவானிடமோ ஆசார்யனிடமோ ஒப்படைத்துவிட்டு ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் பிரபத்யே என்று உச்சரித்துக் கொண்டிரு. அல்லது

10. நல்லறிவு, பக்தி, வேற்றுமையில்லாத மனப்பான்மை இந்த குணங்கள் உள்ளவனும் உன்னை தன்னவன் என்று நினைக்கக்கூடியவனுமான ஒரு ஸ்ரீ வைஷ்ணவனை அண்டி, அகங்கார மமகாரமற்றவனாக, அவன் சொல்வதையெல்லாம் செய்.

அந்த மாதிரி ஸ்ரீவைஷ்ணவனுக்கு, நண்பர்கள் யார், எதிரிகள் யார், இரண்டிலும் சேராதவர் யார் என்பது

புரியும் அவன் நண்பர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். அவன் விரோதிகள் தெய்வ நிந்தை செய்பவர்கள். எதிலும் சேராதவர் உலகமே சகலமும் எனும் லௌகிகர்கள். நண்பர்களைப் பார்க்கும்போது புஷ்பம், சந்தனம் இவற்றைப் போல் உன் மனம் குதூகலப்படும். எதிரிகளைப் பார்க்கும்போது மனம், பாம்பு புலி ஆகிய துஷ்ட ஜந்துக்களைப் பார்ப்பதுபோல் அஞ்சி சுருங்கும். லௌகிகர்களைப் பார்க்கும்போது ஏதோ கட்டை, கல் இவற்றை பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படும். அவர்களைப் பார்த்து பரிதாபப்படு.

[மேற்சொன்ன பத்து கட்டளைகளும் குரு பரம்பரை 1880 வருஷப் பதிப்பில் உள்ளன.]

இப்படி நடத்தப்படும் வாழ்க்கை பயனுள்ளதாக இருக்கும். கருணையான வாழ்க்கையை நடத்து. பகவத் பாகவத கைங்கர்யத்தால் சிறப்படைந்து மேலான இன்பத் அடையப்பார்.

இதுதான் ஸ்ரீராமானுஜ தத்துவம். பூததயை அதன் அஸ்திவாரம்.

கீதாசார்யன் சந்தா விவரம் :

ஆயுள் சந்தா ரூ 250/-

வருடச் சந்தா ரூ. 12/-

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## ௨0. அழகர்மலையிலிருந்து புறப்பாடு

மூடுபல்லக்குகள் ஒவ்வொரு இடத்திலும் தண்டு இறங்கி மதுரையை நெருங்குவதற்கு இருபது நாட்கள் ஆயின. அவற்றின் போக்கைக் குலசேகரன் கண்காணித்துக் கொண்டே போனான். கூடியமட்டிலும் நகரங்களைத் தவிர்த்து கிராமப்புறங்கள் வழியாகவே பல்லக்கு அணி சென்றது. எதிரில் டில்லி வீரர்களைக் காணும்போதெல்லாம் சஞ்சலவதி (ராணியாக நடிக்கும் பணிப்பெண்) தன் முத்திரைமோதிரத்தைக் காட்டி அனுமதியும் மரியாதையும் பெற்றுக்கொண்டிருந்தாள்.

மதுரையை நெருங்கும்போதுதான் அவர்களுக்குப் பல தயக்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. குலசேகரன் ஒவ்வொரு வீரனையும் அறிந்து வைத்திருந்ததால் அவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டே போனான்.

மதுரைச்சீமையை நெருங்கி அழகர்மலைக்குப் பாதை பிரியும் இடத்தில் நடுப்பகலுக்கு முன்னர் பல்லக்கு அணி இறங்கியது.

அந்திப் பொழுது வரை காத்திருந்த குலசேகரனும் அழகிய நம்பியும் பின்னர் இருட்டில் நடந்து அடிவாரத்தை அடைந்து மலைமீது ஏறத் தொடங்கினார்கள்.

ஏற்கெனவே குறளன் மூலம் முன் செய்தி போய் விட்டதால் மலைமேலே இருந்த அரங்கன் ஊர்வலத்தார் புறப்படுவதற்குச் சித்தமாக இருந்தார்கள்.

குலசேகரன் வந்ததும் யாவரும் புறப்பட்டார்கள். அரங்கனுக்காக வெட்டப் பட்டிருந்த கிணற்றில் நீர் எடுத்துக் குளித்த குலசேகரன் புது ஆடை புனைந்து, பக்தி யுடன் அரங்கனை விழுந்து தொழுத பின், அரங்கன் விக்கிரகத்தைக் கையில் அணைத்து எடுத்துக் கொண்டான்.

“சுவாமி! பெரிய மகான்கள் தாங்கி எடுத்துச் செல்ல வேண்டிய தங்கள் திருமேனியை இந்த ஏழை சுமப்பதற்கு மன்னிக்க வேண்டும்” என்று கூறி விக்கிரகத்துடன் கீழே இறங்க ஆரம்பித்தான்.

அவனைத் தொடர்ந்து ஏனைய பரிவாரங்களும் கூட்ட மாக இறங்காமல் உதிரிகளாக இறங்கி வெவ்வேறு திசை களில் செல்ல ஆரம்பித்தார்கள். எல்லோரும் தலைமறை வாகச் சென்று மீண்டும் நாகர்கோவிலில் சந்திக்க வேண்டும் என்று ஏற்பாடாகி இருந்தது.

குலசேகரன் பல்லக்கு கூட்டத்தை அடைவதற்கு முன் இரவின் நடுஜாமம் போய்விட்டது.

அந்த நேரத்திற்குள் சஞ்சலவதியும் அவளது பல்லக்குத் தூக்கிகளும் குளித்துச் சுத்தமாக நின்று கொண்டிருந் தார்கள்.

அரங்கன் விக்கிரகம் வந்ததும் எல்லோரும் கீழே வணங்கி எழுந்தார்கள்.

மெல்லிய நட்சத்திர வெளிச்சத்தில் அரங்கனது முகத் தைக் கண்ட சஞ்சலவதிக்குக் கண்களில் நீர் ததும்பி விட்டது.

விக்கிரகம் அவனுக்கு ஒரு விக்கிரமாகத் தோன்றவில்லை. காட்டில் மறைவாகியிருந்த ஒரு பெரிய சக்கரவர்த்தியே கதியில்லாது போய் அவனைப் போன்ற எளிய அந்தப்புரச் சேடியின் முன்னால் ஓர் உதவி எதிர்பார்த்து நிற்பது போல் தோன்றியது.

கூட்டத்தார் எல்லோரும் அரங்கனை வழிபட்டு விட்டுப் போன பின்பு, அரங்கனைச் சஞ்சலவதியின் பல்லக்கில் ஏற்றினார்கள். பஞ்சணைகளுக்கு நடுவே அவரை அமர்த்தி விட்டுப் பின்னர் சஞ்சலவதியையும் ஏறச் சொன்னார்கள்.

புனிதமான அரங்க விக்கிரகம் இருக்கும் இடத்தில் தானும் ஏறி அமர்வதற்கு சஞ்சலவதி மிகவும் தயங்கினாள். பய பக்தியுடன் ஏறி, அரங்கன் முன்னால் மிகவும் வினயத்துடன் சப்பணம் இட்டு அமர்ந்து கொண்டாள்.

அந்த மூடு பல்லக்குக் கூட்டம் முழுவதும் இப்பொழுது புது உற்சாகத்தில் புறப்பட்டு போது புலபுலவென விடியும் வேளையில் அவர்கள் வைகைக் கரையை அடைந்தார்கள்.

ஆற்றில் எல்லோரும் குளித்து விட்டுப் புது ஆடை அணிந்து கொண்டார்கள்.

சஞ்சலவதி ஒரு ராணிக்குரிய அணிமணிகளை அணிந்து கொண்டாள்.

இதற்குள் குலசேகரனும், இதரர்களும் ஆலோசனை நடத்தினார்கள். ஒய்சள ராணி மதுரைக்குச் சென்று டில்லி தளபதிகளின் மனைவிமார்களுக்குப் பரிசில்கள் வழங்கி விட்டுப் போக வேண்டும் என்று ஏற்பாடாகி இருந்தது. அப்படிப் போகும் போது அரங்கனையும்

மதுரைக்குள் எடுத்துச் செல்வதா என்பது குறித்து அவர்கள் யோசித்தார்கள்.

மதுரைக்கு வெளியே அரங்கனை சில பல்லக்குகளுடன் நிறுத்தி விட்டால் அது சந்தேகத்திற்கு இடமாகும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

ஆகவே மதுரைக்குள் அரங்கனையும் அழைத்துப் போவதுதான் நல்லது என்று முடிவு எடுத்தார்கள்.

அப்படி அரங்கனுக்கு ஆபத்து ஏதாவது ஏற்படும் பட்சத்தில் தாங்கள் தங்கள் உயிர்களைக் கூட மாய்த்துக் கொள்ளச் சித்தம் என்று குலசேகரனும், அழகிய நம்பியும், இதர வீரர்களும் உறுதிமொழி பூண்டார்கள்.

விடிந்து இரு நாழிகையில் மூடு பல்லக்கு அணி மதுரை நோக்கிப் புறப்பட்டது.

மதுரைக் கோட்டை வாசலை அடைந்த போது வெய்யில் ஏற ஆரம்பித்தது.

வாசலில் பல்லக்கு அணி சிறிது நேரம் நின்றது.

ஒய்சள ராணி வருகிறாள் என்று உடனே கட்டியம் கூறப்பட்டது. கோட்டை வாசல் காவலாளர்கள் மரியாதையுடன் நின்றார்கள். கோட்டைக் காவல் அதிகாரி இதற்குள் இரு வீரர்களுடன் பல்லக்கு அணியை நோக்கி நடந்து வந்தார்.

வைகை நதியை விட்டுப் புறப்பட்டபோதே சஞ்சலவதி அரங்கனைப் பஞ்சணைக்குள் படுக்க விட்டு மூடி வைத்திருந்தாள். அந்த அணைகளுக்கு மேல் தலையணைகளை வைத்து அவைமீது சாய்ந்து கொண்டு ''ரங்கா! ரங்கா!'' என்று ஜபித்துக் கொண்டிருந்தாள். கோட்டை அதிகாரி வந்ததும்,

அவள் தன் பல்லக்கின் மூடு துணியை ஒரே ஒரு கணம் மட்டும் விலக்கி அதிகாரியின் வந்தனங்களை ஏற்றுக் கொண்டு முத்திரை மோதிரத்தைக் காண்பித்தாள். அதிகாரி உடலைத் தாழ்த்தி அவளுக்கு வழி விட்டார்.

பிறகு ஒவ்வொரு பல்லக்கையும் அவரும் அவரது வீரர்களும் திறந்து பார்த்தார்கள்.

பல பல்லக்குகளில் வரிசையாக அந்தப்புரச் சேடிகள் இருந்தார்கள்.

ஆளில்லாத பல்லக்குகளில் மூட்டைகள் இருந்தன. அவையாவும் டில்லித் தளபதிகளுக்கு எடுத்துச் செல்லப்படும் தானிய காணிக்கைகள் என்று கூட்டத்தார் கூறினார்கள்.

மதுரை வீதிகளுக்குள் ஒய்சள பல்லக்குகள் அணி வகுத்துச் சென்றன.

அரண்மனையை நெருங்க நெருங்க பல்லக்குகள் நெருக்கிக் கொண்டே சென்றன.

முடிவில் டில்லித் தளபதியின் அந்தப்புர வாசலில் ஒய்சள ராணியின் ராஜ பல்லக்கு நின்றது. ராணியாக வேடந்தரித்த சஞ்சலவதி கம்பீரமாக இறங்கி உள்ளே சென்றாள். அவளைத் தளபதியின் மனைவிகள் வரவேற்றார்கள்.

கொலு மண்டபத்தில் சஞ்சலவதியைச் சிறிது நேரம் அமர்த்தி இரு மொழி தெரிந்தவர்கள் மூலம் அவர்கள் உரையாடினார்கள்.

தளபதி மனைவிமார்களுக்கு ஒய்சள ராணி கொணர்ந்த பொன், பவழம், முத்து, தானிய வகைகள், கனி வர்க்கங்கள், பட்டுத் துணிகள் யாவும் பரிசில்களாக அளிக்கப்பட்டன.

சிறிது நேரம் போன பின்னர் சஞ்சலவதியும் இதரர்களும் தங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட மாளிகைகளுக்குப் போய் விட்டார்கள்.

இதற்குள் ஒப்சள பல்லக்குகள் யாவும் நெருக்கடியைத் தவிர்க்கும் பாவனையில் சுற்றி வர இருந்த வீதிகளில் வியாபித்து விட்டன.

குலசேகரனும் அவன் சகாக்களும் சிறிது கூட அயராமல் அதே நேரத்தில் சந்தேகம் ஏதும் எழும்பா வண்ணம் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

அன்று இரவு சலனமில்லாதது போல் ஓடியது. ஆனால் மதுரை நகரம் முழுவதிலும் ஒரு ரகசிய வேலை நடந்து வந்த விஷயம் வெளியே யாருக்கும் தெரியாது.

பொழுது விடிவதற்கு முன் பல்லக்குகள் யாவும் மீண்டும் புறப்பட்டன. (தொடரும்)

Anything & Everything in
Real Estates
(Buying & Selling Properties)
Civil Constructions
Please Contact

MINERVA ENTERPRISES

2, Narayanan Street,
Mahalingapuram,
Nungambakkam, MADRAS-600 034.

# செய்வன திருந்தச் செய்

தன் போக்கில் நின்று கொண்டிருக்கும் ஒரு மனிதன் மீது மற்றொரு மனிதனைப் பிடித்துத் தள்ளுகிறான் ஒருவன். தள்ளுண்ட மனிதன் தட்டுத் தடுமாறி நின்று கொண்டிருப்பவன் மீது மோதி விழுகிறான். இருவரும் நிலை தடுமாறித் துன்புற்று வீழ்கின்றனர். இவ்விழி செயலுக்குரியவன் மீது சீற்றமெழுகிறது பாதிக்கப்பட்ட இருவருக்கும். மனிதப் பண்பற்ற அந்த மனிதனின் நட்பை இருவருமே வெறுத்து அவனிடமிருந்து விலகி அவ்விடத்தை விட்டே அகன்று சென்று விடுகின்றனர். இது மனித இயல்பு.

---

**மதுரை—மா. செல்லப் பெருமாள் கோன்**

---

இவ்விழி செயலுக் கொப்ப, ஒரு பக்தன் தன் நெற்றியில் திருமண் காப்பு அணிந்து கொண்டு, மேலும் அதன் மீது எங்கெங்கே எந்தப் பிரசாதம் அதாவது, விபூதி குங்குமம் கிடைக்கிறதோ அதையெல்லாம் வாங்கி சாத்திக் கொள்வானானால் அதற்கு என்ன பொருள்? ஸ்ரீமந் நாராயணன் மீது சிவபிரானைப் பிடித்துத் தள்ளி மோதச் செய்து இருவரையுமே நிலை தடுமாறச் செய்து சீற்றமெழச் செய்கிறான் என்பதுதானே பொருள்.

இங்ஙனே திருத்தமற்ற இழிசெயலைச் செய்யும் பக்தன் மீது இருவருக்குமே சீற்றந்தானே பிறக்கும். இருவருமே அவனை ஒதுக்கித் தள்ளி விடுவார்கள் அல்லவா?

ஆகவே திருமண் காப்பு அணிந்து கொள்ளும் ஒரு மனிதன் அதன் அடிப்படையான சித்தாந்தம் என்ன? என்பதைத் திருத்தமாக அறிந்து உணர்ந்து தெளிவு பெற வேண்டும்.

ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள்; அவனுடைய உடைமைப் பொருள் நான். அதாவது, அவனுடைய அடிமை என்பதை எடுத்துக் காட்டவே திருமண்காப்பு அணிந்து கொள்வதன் நோக்கமாகும்.

எடுத்துக் காட்டாக, ஒரு மனிதன் தான் இன்னான் மகன் இன்னான், என்பதை எடுத்துக் காட்டவே தன் திருநாமத்தின்முன், தன் தந்தையின் திருநாமத்தின் முதல் எழுத்தைவிட்டுக் கையொப்பமிடுகிறான். இது உலக இயல்பு இதை விடுத்து எவனாவது வேறு ஒருவனுடைய திருநாமத்தின் முதலெழுத்தைவிட்டுத் தன் திருநாமத்தை எடுத்துக்காட்ட விரும்புவானோ? விரும்பமாட்டான்.

ஆனால், தான் தன் நெற்றியில் அணிந்திருக்கும் திருமண் காப்பு மீது எதைஎதையோ எடுத்துச் சாத்திக்கொள்ள விரும்புகிறானே. இது என்ன விபரீத புத்தி.

ஆகவே, யார் எதைச் செய்ய விரும்பினாலும், அதைத் தெளிவாகத் தெரிந்து உணர்ந்து தேர்ந்து திருத்தமாகச் செய்ய வேண்டும் என்பதையே நம் முன்னோர் ''செய்வன திருந்தச் செய்'' என்று எடுத்துக்காட்டியுள்ளனர் என்பதை உணர்ந்து தெளிவு பெறுவோமாக.

சாண்டில்யன்

எழுதும்

# ஸ்ரீராமானுஜர் வரலாறு

சித்திரைச் சிறப்பிதழில்

ஆரம்பம்

# வானமலை ஜீயர் ஸ்வாமியின் திக்விஜயம்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் திக்கெட்டும் தழைத்தோங்க ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஜீயர்ஸ்வாமி திக்விஜயம் மேற்கொள்ள வேண்டும் என்று நமது வாசகர்கள் சார்பில் நாம் பிரார்த்தித்துக் கொண்டது நினைவிருக்கும் என்று எண்ணுகிறோம். நமது வேண்டுகோளை ஏற்று ஸ்ரீ ஸ்வாமி கடந்த மாதம் முதல் திக்விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார் என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். வானமாமலையிலிருந்து புறப்பட்டு மணவாள மாமுனிகள் அவதாரஸ்தலமான சிக்கல் கடாரம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்கூடல் (மதுரை), திருமாலிரும் சோலை ஆகிய திவ்ய தேசங்களுக்கும், பாளையம் கோட்டை, விருது நகர் முதலிய நகரங்களுக்கும் விஜயம் செய்தருளினார். ஆங்கே வழங்கிய அருளுரைகளில் சில:

"நம் தமிழ் நாட்டில் நமக்கு முக்யமான பாஷைகள் இரண்டு. அவை ஸம்ஸ்க்ருதமும் தமிழும் ஆகும். அவற்றை முறையே மணி என்றும் ப்ரவாளம் என்றும் கூறலாம். மணி என்பது நீலமணியைக் குறித்து, அத்தால் அந்நிறமுடைய திருமாலைக் குறிக்கும். ப்ரவாளம் என்று பவளத்தைக் குறித்து, அத்தால் அந்நிறமுடைய திருமகளைக் குறிக்கும். எனவே இவ்விரண்டு பாஷைகளுமே நமக்குப் பெற்றோர் போன்றவை. தகப்பன் சிறிது கடின சுபாவமுள்ளவனாக இருப்பது போல ஸம்ஸ்க்ருதமும் உச்சரிப்பாலும் இலக்கணத்தாலும் சற்றுக் கடினமாகவுள்ளது. தமிழோ, தாய்போன்று இனிமையும், மென்மையும், எளிமையும் கொண்டது. இதனால்தான் ஆழ்வார்கள் பலரும் ஸம்ஸ்க்ருத விற்பன்னர்களாக இருந்த போதிலும் தமிழிலேயே பாசுரங்களை அருளியுள்ளனர். நாமனைவரும் தமிழ் ஸம்ஸ்க்ருதம் ஆகிய இரண்டு பாஷைகளையுமே படிக்க வேண்டும்.............."

# ஸ்ரீமத் பகவத் கீதை

## இரண்டாம் அத்யாயம்

**தேஹீ நித்யமவத்யோऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத!**
**தஸ்மாத்ஸர்வாணி பூதாநி நத்வம் சோசிதுமர்ஹஸி ॥ 30**

பரதகுலத்திற் பிறந்தவனே! ஸகலாத்மாக்களுடைய தேகம் அழியப் பெற்றபொழுதும் இந்த ஆத்மா அழியப் பேருதவனாக எண்ணப்படுவன்; ஆதலால் தேவன் மநுஷ்யன் முதலிய ஸகலாத்மாக்களைக் குறித்தும் நீ வருந்துதற்கு உரியனல்லை என்பதாம்.

தேவன் மநுஷ்யன் முதலிய ஸகலாத்மாக்களுடைய சரீரங்களில் வேற்றுமை காணப்படுகின்றது. சரீரங்களின் வேறுபாட்டால் ஆத்மாக்களுடைய இன்ப துன்பங்களின் வேறுபாடு காணப்படுகின்றது. அப்படியே ஆத்மாக்களில் நித்யர்கள் அநித்யர்கள் என்ற வேறுபாடு இருக்கலாமே என்ற கருத்து அர்ச்சுனனுக்கு உண்டாயிற்று; அதற்கு விடையளிக்கின்றான் பகவான்;

தேகங்கள் என்பவை ஆத்மாக்களின் வினைப்பயனால் வந்தவை. அவற்றின் வேறுபாடுகளால் ஆத்மாக்களின் ஞானத்தில் வேறுபாடுகள் உண்டாகின்றது. அவையே ஆத்மாக்களுடைய இன்ப துன்ப வேறுபாடுகளுக்குக் காரணம். தேவன் மநுஷ்யன் என்ற வேறுபாடு தேகத்தில் உள்ளது. இன்ப துன்பங்கள் ஆத்மாக்களில் உள்ளன. எனவே தேகங்கள் அழிந்தாலும் ஆத்மாக்களுக்கு அழிவில்லை என்று உணரலாம். ஆதலால் பீஷ்மன் முதலியோரைக் குறித்து நீ வருந்துதற்கு உரியனல்லை என்பது மாத்திரமல்ல; ஸகல பூதங்களைக் குறித்தும் வருந்துதற்கு உரியனல்லையென்று தெரிவித்தருளினனாயிற்று.

# அன்புள்ள வாசகரே!

அனைவருக்கும் ஆண்டுமலர் கிடைத்திருக்கும் என்று நம்புகிறோம். ஆண்டுமலர் தபாலில் தவறிவிடாமல் இருக்கவே V. P. P. யில் அனுப்பினோம். அதனால்தான் இவ்வளவு தாமதமாகி விட்டது. பற்பலரும் ஆண்டுமலர் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது என்றெழுதி எங்களுக்கு மேலும் ஊக்கமளித்துள்ளீர்கள், நன்றி.

காலண்டர் இன்னும் வந்து சேரவில்லை என்பது பெரும்பாலோருடைய குறை. காலண்டர் விஷயத்தில் தபால் அலுவலக விதிமுறைகள் நமக்குச் சாதகமாக இல்லை. மேலும் சாதாரணத் தபாலில் பரீட்சார்த்தமாக ஒரு சிலருக்கு அனுப்பப்பட்ட காலண்டர்களும் (ஒன்றுகூட) போய்ச் சேரவில்லை என்று தெரிகிறது. **எனவே காலண்டரைத் தபால் மூலம் அனுப்பும் எண்ணத்தை அறவே கைவிட்டுவிட்டோம்.** சந்தாதாரர்கள் எந்த நாளில் வேண்டுமானாலும் தோசார்யன் அலுவலகத்திற்கு **நேரில் வந்து** காலண்டரைப் பெற்றுக் கொள்ளலாம். (அலுவலக நேரம்: காலை 7 மணி முதல் 9 மணி வரை; மாலை 6 மணி முதல் 8 மணி வரை)

ஒருசிலருக்கு மாத இதழ்கள் சரிவரக் கிடைப்பதில்லை என்று எழுதியிருக்கிறீர்கள். ஒவ்வொருமாதமும் எல்லாச் சந்தாதாரர்களுக்கும் கடமை தவருமல் அனுப்பி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் அனுப்பப்பட்டதை சரிபார்த்து, எங்கள் பதிவேடுகளில் குறித்துக் கொண்டு, பிறகு தபால் அலுவலகத்திற்கு அனுப்புகிறோம். அப்படியிருந்தும் சிலர் தங்களுக்குப் பத்திரிகை வந்து சேரவில்லை என்று எழுதுகிறார்கள். தபாலில் சேர்ப்பது வரை தான் எங்கள் அதிகாரம்; அதற்குப் பிறகு, தபாலில் சேர்த்த புத்தகங்கள் வாசகர்கள் கையில் கிடைக்கவில்லையென்ருல் நாங்கள் என்ன செய்வது என்று புரியவில்லை. நீங்களே ஏதேனும் ஆலோசனை கூறினலும் ஏற்கச் சித்தமாயிருக்கிறோம்.

பிரபல எழுத்தாளர் சாண்டில்யன் அவர்கள் எழுதும் ''ஸ்ரீராமானுஜர் வரலாறு,'' சென்னைப் பல்கலைக் கழக தொல்பொருள் துறை தலைமைப் பேராசிரியர் Dr. K. V. ராமன் அவர்கள் எழுதும் ''கல்வெட்டுகளில் வைணவம்'' கட்டுரைத்தொடர், வாசகர்களுடைய கேள்விகளுக்கு விடையிறுக்கும் ''ஸுதர்சனர்பதில்'' போன்ற பல (புதிய) பகுதிகள் அடுத்த இதழில் தொடர இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

———

# திருமணிக் கூடம்

திருமணிக்கூடம்:- திருநாங்கூர் திருப்பதிகளுள் (திவ்ய தேசங்களில்) இதுவும் ஒன்று ஒளிமிக்க மணிகளால் இழைக்கப்பட்ட மாட மாளிகைகள் கொண்ட திவ்ய தேசம். திருமங்கையாழ்வார் காலத்தில் மிகச் சிறப்புற்ற இடமாக விளங்கி இருக்கக் கூடும்! ஆனால், இப்போது அங்கு சென்று பகவானை ஸேவிப்பவர்களுக்கு அவனே ஒரு திருமணிக்கூடம் என்று தோன்றும்.

நாம் பகவானிடம் பக்தி (அன்பு) கொண்டிருக்கிறோம். அவன் நம்மீது அன்பு கொண்டிருக்கிறான். அவனிடம் அன்பு (பக்தி) கொள்வது நம் கடமை; அவன் நம்மீது அன்பு

# ஸ்தலசயனத்துறைவார்

கொண்டிருப்பதற்கு அவனது கருணையே காரணம். நாம் அவனை நினைத்துக் கொண்டே இருப்பதில்லை; சிற்சில நேரங்களில் மறந்தும விடுகிறோம். ஆனால், நமக்குத் தாயாகவும் தந்தையாகவும் ஆசாரியனாகவும் இருக்கும் அவன் நம்மையும், நம்மைச் சேர்ந்தவர்களையும் உய்விக்கும் வழியையே சிந்தித்துக் கொண்டிருக்கிறான். நாம் அவனிடம் கொண்டிருக்கும் அன்பைவிட அவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பு கடலினும் பெரிது! அன்புக் கடல் அவனது மனக்கடலில் தேங்கிநிற்கிறது. அவன் மணிவண்ணனாதலால், அவனுள்ளத்தில் இருப்பது ஆண்டாளுக்குத் தோன்றுகிறது. 'மாலே

என்றழைத்து 'மணிவண்ணா' என்று வாய் குளிரக் கூறினான். அவனே இங்கு மணிக்கூடமாக இருந்துகொண்டு அடியார்கள்மீது தன் அன்பை விளக்கும் முறையில் 'திருமணிக்கூட நாயகன்' என்ற திருநாமத்தோடு எழுந்தருளி இருக்கிறான். நின்ற திருக்கோலம். 'இவனே கஜேந்திராழ்வானின் துயர் கெடுத்து அருளினான்' என்று தொடங்கி ஆழ்வார் மங்களா சாஸனம் செய்வதால் இவன் கஜேந்திர வரதன்!

எல்லாம் அவனே:- துன்பம் சேர்ந்தபோது அதைக்கண்டு வருந்தாமலும், இன்பம் ஏற்படும் போது அதை நினைத்து மகிழாமல் இருப்பவனே அறிவுள்ளவனாகக் கருதப்படுகிறான். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் 'அவனே' என்றிருப்பவன் மஹாத்மா. எல்லா வினைகளும் வினைப்பயன்களும் (அவனே) பகவானே என்றிருப்பவனைத் தீவினைகள் அணுகா. புண்ணியமும் அவன்தான்! பாவமும் அவன்தான்! மோக்ஷமும் அவனே! சுகதுக்கங்களும் அவனே! ஸத்துவம் முதலிய எல்லாப் பண்புகளும் அவனே! ஸந்தேஹமும் அவன்தான். நிச்சயமும் அவன்தான்! உலகினுக்கு நன்மை தரும் மெய்யும்; பொய்யும் அவனே! விரும்பித் தொழும் மெய்யர்க்கே மெய்யனாகும்! பொய்யர்க்குப் பொய்யனாகும். உலகினுள்ளோரைக் காப்பாற்ற மழையைப் பொழிவிக்குமாறு மேகங்களுக்குக் கட்டளை இடுபவனும் அவனே! உலகத்தை இயக்குபவனே அவன்தான்! அவனன்றி ஓரணுவும் அசையாது. இவ்வளவு பெருமைகளோடு கூடியவன் திருமணிக்கூடத்தான்!

குளத்தில் தாமரை மலர்ந்திருக்கின்றன. அவற்றிலிருந்து தேன் வெள்ளமாகப் பெருகித் தண்ணீரில் விழுகிறது. தண்ணீரில் வாழும் வாளை மீன் அதைப்பருகிவிட்டுப் பெருங் களிப்போடு இங்கும் அங்கும் தண்ணீரில் பாய்கிறது. அதைக் கண்டு பயந்து கயல் மீன்கள் துள்ளித் துள்ளி அருகில் இருக்கும் நீர்நிலைகளை நாடிச் செல்லுகின்றனவாம். திருமணிக்கூடத்தான் திருவடி நிழலில் (அவனது அனுக்ர

றந்தைப் பெற்று) வாளை மீன்கள் வாழ்வதுபோல், கயல் மீன்களும்தான் வாழ்கின்றன! வாளை மகிழ்கிறது; கயல்மீன் அஞ்சுகிறது! வாளைக்கு மகிழ்ச்சியை அளிப்பவனே (பகவானே) கயலுக்கு அச்சத்தையும் அளிக்கிறான். இன்பமும், இன்பத்தை அளிப்பவனும் அவனே; துன்பமும், துன்பத்தை அளிப்பவனும் அவனே என்பதைத் திருமங்கையாழ்வார் திருமணிக்கூடத்தைக் காட்டி விளக்குகிறார்.

சங்கையும் துணிவும் பொய்யும் மெய்யுமித்தரணியோம்பும்
பொங்கிய முகிலும் அல்லாப் பொருள்களுமாய வெந்தை
பங்கயமுகுத்ததேறல் பருகியவாளை பாய
செங்கயலுகளும் நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே.

பெரிய திருமொழி 4-5-8

தீரும் நோய் வினைகளெல்லாம்!: –பகவானே மருத்துவன் தீராத நோய்களை எல்லாம் தீர்த்து வைக்கும் வைத்தியன். அவனது திருநாமத்தைச் சொன்னாலே போதும்! இந்நாளில் நம் பாபத்தைப் போக்கிக் கொள்ள எந்த வழியும் இல்லை; நம்மால் எந்த நல்வினைகளையும் செய்ய இயலாது. ஆனால் பகவானின் திருநாமங்களைப் (பெயர்களை)ச் சொல்லமுடியும்! அவனுக்குப் பல பெயர்கள் உண்டு அவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சொன்னாலே போதும்!

உலகில் வாழும்வரை பாபங்களும் நம்மை வந்தடைந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கும்; நமக்குத் துன்பத்தை அளித்துக் கொண்டுதான் இருக்கும். இவன் அறிவுள்ளவனா? அறிவில்லாதவனா? என்று பாவம் பார்ப்பதில்லை. அறிவுள்ளவனும் ஏதேனும் ஒரு வகையில் பாவத்தைச் செய்கிறான்; அறிவில்லாதவன் செய்தே தீருகிறான். எவரை ஏமாற்றினாலும் பாவத்தை ஏமாற்ற முடியாது நாம் எங்கு சென்றாலும் நம்மை அது விடுவதில்லை; பயனைக் கொடுத்துவிட்டுத்தான் செல்லும்! அப்பயனை அனுபவித்தே தீரவேண்டும்.

அப்படியாகில் பாவத்திலிருந்து விடுபடும் வழியே இல்லையா' என்று சிந்திக்க வேண்டா. பாலைப் பருகப் பருகப் பித்தம் தானாகவே நீங்கும். பகவானின் திருநாமத்தைச் சொல்வதற்கும் பாக்கியம் இருக்க வேண்டும். அவனது திருப்பெயரைச் சொல்லிக்கொண்டே இருந்தால் முன் செய்த தீவினைகள் அழிந்து மறைந்து போகும். யார் வேண்டுமானாலும் பகவானின் திருநாமத்தைச் சொல்லலாம். 'ஹரிர் ஹரி:' என்றால் பாவம் அழிந்து போகிறது. 'கேசவா' என்றால் நம் இடர் கெடும்; துன்பம் தரும் மற்ற வினைகளும் அழிந்து போகும். 'தாமோதரா' என்றால் நம்முடைய பாவங்கள் தீயினில் தூசாகும்! காலத்தின் சுபாவத்தாலும், மற்ற சூழ்நிலைகளாலும் உருவாகும் பாவமும் நம்மை அணுகா. தீவினை செய்வோரின் நடுவில், நாமும் வாழ்ந்தாலும் பாவம் நம்மை அடைவதில்லை. தாமரை இலையைத் தண்ணீர் ஒட்டுவதில்லை; பகவானின் திருநாமத்தைச் சொல்லுகிறவரைப் பாவம் ஒட்டுவதில்லை.

இவ்வளவு எளிய முறையில் பாவத்தைப் போக்கிக் கொள்ளும் வழியை அறியாமல் அலைகின்ற மடநெஞ்சே! இரத்தினமணிகள் இழைக்கப்பட்ட கூடத்தில் இருந்த (குவலயாபீடம் என்ற) யானையோடு போர் செய்து அதன் தந்தங்களைப் பறித்த கண்ணனே திருமணிக்கூடத்தில் இருப்பவன். திருமணிக் கூடத்து எம்பெருமானின் திருநாமத்தைச் சொல்! முன் செய்த தீவினையும் சேராது; பின் செய்யும் தீவினையும்வாராது என்கிறார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்,

சேராது முன்செய்த தீவினை பின்செய்வதுவும்
வாராது இனி நீ மடநெஞ்சே!—நேராகக்
குருமணிக்கூடத்து ஆனைக் கொம்பு பறித்தானைத்
திருமணிக்கூடத்தானைச் செப்பு. (நூற். திருப்-37)

# கண்ணன் கதைகள்
## தீபம். நா. பார்த்தசாரதி

### 20. தீரச் செயல்கள்

ஒரு சமயம் உமாமகேசுவரர் திருவிழா ஒன்றைக் காண்பதற்காகக் கோகுலத்திலுள்ள எல்லோரும் அம்பிகா வனத்திற்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார்கள். அம்பிகா வனம் ஒரு அழகிய காடு. இயற்கை வளம் செறிந்தது. வழிபாடும் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. கண்ணனுடைய நல்வாழ்வுக்கு ஆசி கோரி ஒரு நல்ல வேளையில் அந்தணர்களுக்குச் சோறிட்டார் நந்தகோபர். நந்தகோபரோடு உபநந்தனர், சந்தனகர் என்ற வேறிரண்டு கோகுலத்துச் செல்வர்களும் உடன் வந்திருந்தனர். அவர்கள் மூவரும் அன்றிரவு உண்ணா நோன்பிருந்தனர். சிறிதளவு தண்ணீர் மட்டும் பருகிப் படுத்துக் கொண்டனர். அவர்கள் தங்கி இருந்த இடமோ அடர்ந்த வனாந்தரமாகிய காட்டுப் பகுதி.

இரவு நடுநிசியில் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது பசியோடு இருந்த பெரிய மலைப்பாம்பு ஒன்று அந்தப் பக்கமாக இறங்கி வந்தது. நந்தகோபர் முதலிய மூவரும் படுத்திருந்த இடத்திற்கு வந்ததும் பசி மிகுதியால் நந்தகோபரைப் பற்றி விழுங்கலாயிற்று அது. நந்தகோபர் இன்னதென்று விவரம் புரியாமல் பயத்துடன் எழுந்து கூச்சலிட்டார். சுற்றிலும் படுத்துக் கொண்டிருந்த கோபாலர்கள் தீப்பந்தங்களைக் கொளுத்திக் கொண்டு என்னவோ, ஏதோ என்று பதறிப் போய் ஓடிவந்தார்கள். மலைப்பாம்பு நந்தகோபரை விழுங்கிக் கொண்டிருந்ததைக் கண்டதும், பாம்பினிடமிருந்து அவரை மீட்கக் கருதிப் பாம்பின் உடலில் தீ

யால் கட்டினர். கம்புகளால் ஓங்கி அடித்தனர். கோடாரி யால் வெட்ட முயன்றனர். ஆனுல் பாம்பு இதற்கெல்லாம் அஞ்சி நந்தகோபரை விடாமல் மேலும் விழுங்கிக்கொண்டே இருந்தது. அந்தச் சமயத்தில் கண்ணன் எழுந்திருந்து அங்கு வந்தான். கோபத்தோடு அந்தப் பாம்பைத் தன் கால்களால் பலங்கொண்ட மட்டும் ஓங்கியுதைத்தான். கண்ண னுடைய பாதம் பாம்பின் உடலைத் தீண்டிற்ருே இல்லையோ பாம்பு இருந்த இடத்தில் பாம்பைக் காணவில்லை. அழகான வித்தியாதரன் ஒருவன் நின்ருன். எல்லோருக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை. "வித்தியாதரனே! நீ யார்? உனக்கு இந்தச் சாபம் யாரால் வந்தது?" என்று அவனைக் கேட்டான் கண்ணன்.

"கண்ணு! நீ என்னுடைய சாபத்தைத் தீர்த்தருளிய வள்ளல் உனக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறேன். என்னுடைய பெயர் சுதர்சனன். நான் ஒரு வித்தியாதரன். ஒரு நாள் மகாமுனிவரான ஆங்கிரசருடைய தோற்றம் குரூரமாயிருப்பதைக் கண்டு அவர் முன்னுலேயே நான் கேலி செய்து சிரித்து விட்டேன். அதனுல் சினம் கொண்டு அவர் கொடுத்த சாபத்தின் விளைவு இது. அன்று அவர் உன்னுல்தான் எனக்குச் சாபவிமோசனம் நேரும் என் பதையும் கூறியிருந்தார். அப்படியே இன்று சாபவிமோசன மும் பெற்றேன்" என்று சொன்னுன் அந்த வித்தியாதரன். கண்ணன் அவனை வாழ்த்தி அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினுன். மலைப்பாம்பினிடமிருந்து விடுபட்ட நந்த கோபர் துயரம் நீங்கி மகிழ்ச்சியோடு இருந்தார். மறுநாள் காலையில் எல்லோரும் அம்பிகா வனத்திலிருந்து புறப்பட்டுக் கோகுலத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அன்றிரவு பௌர்ணமி நிலவு பால்போலக் காய்ந்து கொண்டிருந்தது. கண்ணனும் பலராமனும் பிருந்தாவனத் தில் அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டே புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தனர். வேறு பல கோபாலர்களும்

கோபிகைகளும் இந்தக் குழலிசையில் கட்டுண்டு அங்கிருந்து போக மனமின்றி உட்கார்ந்திருந்தனர். குபேரனுடைய தோழனாகிய சங்கசூடன் என்பவன் அந்தப் பக்கமாக வந்தான் அவன் பொறாமைக் குணம் படைத்தவன். குழலிசையையும் அதற்கு மயங்கியிருக்கும் கோபிகைகளையும் கண்டு காமுற்றுப் பொறாமை கொண்டான். உடனே தன் வலிமையினால் அழகிய கோபிகைகளையெல்லாம் வலுவில் அழைத்துக் கொண்டு வடக்குப் பக்கமாக ஓடினான். கோபிகைகள் அவனிடமிருந்து மீளவழியறியாமல் கண்ணன் பெயரைச் சொல்லிக் கூவி முறையிட்டு அலறினார்கள். சங்கசூடனைத் தடுத்து நிறுத்துவதற்காக அவன் பெயரை உரக்கச் சொல்லிக் கூப்பிட்டான் கண்ணன். அப்படியும் அவன் ஓடுவதை நிறுத்தவில்லை. கோபமடைந்த பலராமன் ஒரு மரத்தை வேரோடு பிடுங்கிக் கொண்டு அவனை அடித்துத் துரத்துவதற்காக ஓடினான். கண்ணன் தன் மாயாசக்தியால் சங்கசூடன் ஓடி ஒளிகின்ற இடங்களிலெல்லாம் அவனுக்கும் முன்பாகவே போய் இருந்து பயமுறுத்தினான். எங்கு ஓடி ஒளிய முயன்றாலும் அங்கு தனக்கும் முன்பே கண்ணன் வந்து நிற்பதைக் கண்ட சங்கசூடன் அரண்டு போய் நின்று விட்டான். அந்தச் சமயத்தில் கண்ணன் தன் இரண்டு கைகளையும் மேலே மடக்கி ஓங்கி ஒரு குத்துக் குத்தவே சங்கசூடன் அலறிக் கொண்டு கீழே விழுந்து இறந்தான். அப்போது அவனிடத்திலிருந்து பறித்த அருமையானதொரு இரத்தினக் கல்லைக் கண்ணன் தன் அண்ணனான பலராமனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். கோபிகைகள் ஒரு துன்பமுமின்றிக் காப்பாற்றப் பட்டார்கள்.

கோகுலத்துக்கு இதுவரை வந்த ஆபத்துக்களெல்லாம் மிகச் சிறியவை என்று சொல்லும் படியான பேராபத்து ஒன்று அப்போது வந்து சேர்ந்தது. அரிஷ்டாசுரன் என்ற பெரிய அரக்கன் ஒருவன் சண்டமாருதம் போல் கொடுமை மூண்டெழுந்து கோகுலத்துக்குள் நுழைந்து வந்தான். அவனுடைய மாட்டுப் பெருருவின் வானை முட்டும் கொம்பு

களையும் தரையைப் பிளக்கும் குளம்புகளையும் திசையைத் தடவும் நீண்ட வாலையும் பார்த்தாலே ஊழிக்காலத்துப் புயலின் உருவம் மாதிரி இருந்தது. முட்டியும், உதைத்தும் ஏற்றியும், இடறியும் அவன் செய்த கொடுமைகளில் கோகுலம் அழிந்தொழிந்து போகவேண்டிய சூழ்நிலை. ஆனால் கண்ணன், அழியவிடவில்லை; அழியாமல் காக்க வேண்டிய பொறுப்பு எப்போதும் எந்தக் கண்ணனுக்கு இருக்கிறதோ அந்தக் கண்ணனே அப்போதும் காத்தான். காளை உருவத்தில் வந்த அந்த அசுரனைக் கண்டதும் கோகுலத்திலுள்ளோர் அனைவரும் அலறிப்புடைத்துக் கொண்டு ஓடிப்போய்க் கண்ணனிடம் முறையிட்டனர். அவர்களையெல்லாம் காப்பாற்றுவதற்காக வாக்களித்த கண்ணன் தனியொருவனாக அரிஷ்டாசுரனுக்கு முன்போய் நின்றான். பல வீரவுரைகளைக் கூறி முழக்கமிட்டுக் கொண்டே அசுரனுக்கு அருகில் சென்றான். கழுத்தில் குபீரென்று இரண்டு கைகளையும் அழுத்தித் திருகினான். காளை அடங்கிப் பயந்து நின்றது. ஒரு கணம் தான் அந்த அடக்கமெல்லாம். அடுத்த விநாடி அரிஷ்டாசுரன் என்ற காளைக்கு எங்கிருந்துதான் அவ்வளவு திமிரும் ஆத்திரமும் ஏற்பட்டதோ? பின்னங்கால்களினால் தரை அதிர ஓங்கியுதைத்துப் பெருந்தூளிகளெழும்படி செய்து திமிறப் பாய்ந்தது. அது பாய்ந்த வேகத்தைச் சமாளிக்க முடியாத கண்ணன் தடுமாறிக் கீழே விழுந்தான். விழுந்த சினத்தோடு துள்ளி எழுந்த கண்ணன் அந்தக் காளையின் இரு கொம்புகளையும் பிடித்து ஆட்டி அசைத்து சுழற்றி வெகுதூரத்தில் போய் நிலைகுலைந்து விழும்படி அதைக் கீழே தள்ளினான். விழுந்த காளை, சில விநாடிகளுக்குள் எழுந்திருக்கவும் சக்தியின்றி அடங்கி ஒடுங்கிக் கிடந்தது. சில விநாடிகளுக்குப் பின் கடுங்கோபத்துடனே மீண்டும் கண்ணனை முட்டித் தள்ளுவதற்காகக் கனைத்துக் கொண்டு எழுந்தது.. முடியவில்லை. இப்படிப் பல முறைகள் நடந்தபின் இறுதியாகக் கண்ணன் அதை வேரற்ற மரம்போல் கீழே தள்ளிச் சாய்த்துக் கொன்றான் கோகுலத்துக்கு மலைபோல வந்த துன்பம் பனிபோல் நீங்கிவிட்டது. அதற்குக் காரணமாயிருந்தது கண்ணனுடைய வீரச் செயலே ஆகும். (தொடரும்)

# ஸ்ரீபாஷ்ய ஸாரம்

## முதல் ஸூத்ரார்த்த விசாரம்

இதில் (அத அத:) என்கிற இரண்டு பதங்களினால் கர்ம விசாரத்திற்குப் பிறகு, கர்மவிசாரம் முடிந்ததென்கிற காரணத்தாலேயே, ப்ரஹ்ம விசாரம் செய்யத்தக்கதென்று கிடைப்பதனால் ப்ரஹ்மவிசாரத்தைக் குறித்துக் கர்ம விசாரம் நியமேந பூர்வவ்ருத்தமென்று தேறுகின்றது இதைப்பற்றியும் சிறிது விவரிக்கப்படுகிறது. வேதமோதினவொரு புருஷன் வேதவாக்யங்களில் கர்ம பலத்தைப் பற்றியும் ப்ரஹ்மஜ்ஞான பலத்தைப்பற்றியும் ஸ்திரமென்று சிலவிடங்களிலும் அஸ்திரமென்று சிலவிடங்களிலும் மேலெழுந்தவாரியாக வுணர்ந்து இவற்றில் எது

ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

உண்மையென்று நிர்ணயம் தெரிந்துகொள்ள விரும்புகிறான். அந்த விருப்பத்தினால் அதை நிர்ணயித்துத் தரக்கூடிய சாஸ்த்ரங்களில் ப்ரவர்த்திக்கிறான். கர்மபலனைப்பற்றின வுண்மையை நிச்சயித்துத் தரவல்ல சாஸ்த்ரங்களில் முந்துறமுன்னம் ப்ரவர்த்திக்கிறான். அநாதி வாஸனையினால் கர்மங்களைச் செய்வது எளிதென்று பொதுவாகத் தோன்றியிருக்கும். ப்ரஹ்மஜ்ஞானத்தில் அப்யாஸமில்லாமையினாலே அது துஷ்கரமென்றும் தோன்றியிருக்கும். ஆகவே எளிதான உபாயத்தினால் அபிமதம் கைபுகுவதாயிருக்க அரிதான உபாயத்தில் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்க

மாட்டாதாகையாலே ப்ரஹ்மஜ்ஞானத்தின் பலனைப் பற்றி நிர்ணயிக்கவேணுமென்கிற விருப்பம் தடைபட்டு, கரும பலனைப் பற்றி நிர்ணயிக்கவேணுமென்கிற விருப்பமே தலையெடுத்திருக்கும். இங்ஙனம் முன்னம் கருமவிசாரம் செய்தவளவில் கருமபலன்கள் அஸ்திரம் என்கிற நிச்சயமுண்டாகிறது இப்படி நிச்சயமுண்டானவளவில், கர்ம விசாரேச்சை தொலைந்ததாகிறது; இந்த கர்ம விசாரேச்சையே முன்பு ப்ரஹ்ம விசாரேச்சைக்கு இடையூறாயிருந்ததனால் இந்த ப்ரதிபந்தகம் தொலையவே ப்ரஹ்ம விசாரத்தில் இச்சையும் அதில் ப்ரவ்ருத்தியும் அடுத்த படியாக உண்டாகிறது. எனவே ப்ரஹ்ம விசாரத்தைக் குறித்து கர்ம விசாரம் நியமேந அபேக்ஷிதமென்றதாகிறது. இதுவே பூர்வ வ்ருத்தமாக இருக்கத் தக்கதாதலால் (அத அத:) என்கிற பதங்களுக்குப் பதவுரையில் கூறிய பொருளே பொருத்தமுடைத்தென்றதாயிற்று.—*

## ௨. இரண்டாவது—ஜந்மாத்யதிகரணம்.

உலகில் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேணுமானால் லக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அப்படியே பரப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானாலும் ஒரு லக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்து கொள்ளவேண்டும். நாம் கண்ணால் காணக் கூடிய பொருள்களுக்கே லக்ஷணம் கூறமுடியுமேயல்லது கண்ணுக்குப் புலப்படாத பொருளுக்கு லக்ஷணம் கூறமுடியாது. பரப்ரஹ்மமோ கண்ணுக்குப் புலப்படாததேயன்றிப் புலப்படுமதன்று. ஆகவே அதற்கு ஒரு லக்ஷணம் கூற இயலாதபோது அது தெரிந்துகொள்ள முடியாததென்று தேறிவிட்டபடியால் அந்தப் பரப்ரஹ்மத்தைப்பற்றின விசாரம் எப்படி செய்ய ப்ராப்தமாகும்? என்று ஆக்ஷேபம் தோன்ற. அவ்வாக்ஷேபத்தைப் பரிஹரிக்க இந்த அதிகரணம் எழுகின்றது.

## ஜந்மாத்யஸ்ய யத: 1-1-2

ஜந்மாதி, அஸ்ய, யத: என்று மூன்றுபதமாகவுள்ளது இந்த ஸூத்ரம். **அஸ்ய**—கண்ணால் காணப்படுகிற இந்த சேதந மிச்ரமான ப்ரபஞ்சத்திற்கு, **ஜந்மாதி**—உற்பத்தி, ஸ்திதி, ப்ரளயங்கள், **யத:**—எந்த வஸ்துவிலிருந்து, ஆகின்றனவோ, (அதுதான் பரப்ரஹ்மம்) என்பதாக ஸூத்ரத்தின் பொருள்.

தைத்திரீயோபநிஷத்தில் ப்ருகுவல்லியென்னும் ப்ரகரணத்திலுள்ளதான **"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி, தத் விஜிஜ்ஞாஸஸ்வ, தத் ப்ரஹ்மேதி"** என்னும் வாக்யமானது பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வ ரூபமான லக்ஷணத்தைச் சொல்லியிருக்கின்றது. உலகில் நாம் ஆடு மாடுகளுக்கு ஒவ்வொரு லக்ஷணத்தைக்கொண்டு இதர பேதத்தை எப்படி நிச்சயிக்கிறோமோ அப்படியே ப்ரஹ்மம் கண்ணுக்குப் புலப்படாததாயிருந்தாலுங்கூட ஜகஜ்ஜந்மாதி காரணத்வ ரூபமான லக்ஷணத்தைக்கொண்டு சேதநாசேதநங்களிற்காட்டில் வேறுபட்டதென்று நிச்சயிக்கமுடியுமாதலால் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தைப்பற்றின விசாரம் கூடும் என்றதாயிற்று.

**(இங்கே பூர்வபக்ஷம்)** — ப்ரஹ்மத்திற்கு ஜந்ம காரணத்வம் முதலானவை லக்ஷணமாக ஸம்பவிக்கமாட்டாதென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது. **"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே"** இத்யாதியாக எடுத்துக் காட்டின உபநிஷத் வாக்யத்தில் அந்வய க்ரமம் எப்படி காணவேணுமென்றால், **"யத: இமாநி பூதாநி ஜாயந்தே தத் ப்ரஹ்ம; யேந ஜாதாநி ஜீவந்தி தத் ப்ரஹ்ம; யத் ப்ரயந்தி** அபிஸம்விசந்தி **தத் ப்ரஹ்ம"** மூன்று வாக்யங்களாகப் பிரிந்து அந்வயங்கொண்டு ஜந்மகாரணத்வம் ஒரு லக்ஷணமென்றும், ஸ்திதி

காரணத்வம் மற்றொரு லக்ஷணமென்றும், லயகாரணத்வம் வேறொரு லக்ஷணமென்றும் ஆக வ்யாவர்த்தக லக்ஷணங்கள் மூன்று அங்கீகரிக்கப்பட வேண்டியதாகின்றது. இப்படி யாகுமளவில், ஒரே ப்ரஹ்மம் என்றல்லாமல் பல ப்ரஹ்மங்கள் என்பதாகத்தேறும். வ்யாவர்த்தகங்கள் பலவானால் வ்யாவர்த்யமும் பலவாக வேண்டுகையாலே.

நரு. இப்படி யொரு நிர்ப்பந்தமுண்டோ? தேவதத்தன் கறுத்தவனாயும் பருத்தவனாயும் யுவாவாயும் செந்தாமரைக் கண்ணனாயு மிரா நின்றான் என்று ஒருவர் சொன்னால் கறுப்பு முதலிய வ்யாவர்த்தகங்கள் பலவாயிருப்பதுகொண்டு வ்யாவர்த்யனான தேவதத்தனும் பல வ்யக்திகளாகத் தேறி விடுவானோ? ப்ரத்யக்ஷமாக ஒரு தேவதத்தனையே நாம் காண்கிறோம். அவ்வொரு வ்யக்தியினிடத்தில கருமை, பருமை முதலான பலவும் கூடியிருக்கக் காண்கிறோம். இதுபோல ஒரு ப்ரஹ்மத்தினிடத்திலேயே ஜந்ம காரணத்வம் முதலானவை பலவும் கூடியிருக்கக் குறையில்லையே. இவ்வாறால் ப்ரஹ்ம வ்யக்தி பஹுத்வம் எப்படி ஆபத்தி பண்ணமுடியும்? என்று மத்யே சங்கை தோன்றும். இதற்கு ஸமாதானம், கருமை பருமை முதலிய பலவற்றால் தேவதத்த வ்யக்தியில் பன்மைவந்துவிடமாட்டாதென்பது வாஸ்தவமே. தேவதத்தன் கண்ணுக்குப் புலப்படுமவனாதலால் அவ்விஷயம் வேறு, ப்ரஹ்மம் அப்படி ப்ரத்யக்ஷமன்றே. அதுவோ அப்ரத்யக்ஷமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் ஒன்றிலேயே கூடுமென்று ஸ்தாபிக்கவல்ல ப்ரமாண மெதுவும் புலப்படவில்லை. லக்ஷணங்கள் எல்லாம் இதர பேதத்தை ஸாதித்துக் கொடுக்குமவை என்பது உத்ஸர்க்கத: ப்ராப்தமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வமென்னுமித்த லக்ஷணங்கள் இதர பேதத்தை (வ்யாவ்ருத்தியை) ஸாதித்துக் கொடுக்குமளவில் இதற்கு அபவாதம் யாதொன்று மில்லாமையினாலே ஜன்மகாரணத்

வமாகிற லக்ஷணமானது என்ன செய்யுமென்றால், தன்னைக் கொண்டு லக்ஷணீயமான ப்ரஹ்மத்திற்கு ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் லயகாரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக்கொடுத்தே தீரும். இப்படியே ஸ்திதி காரணத்வரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு—ஜந்ம காரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் லயகாரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இப்படியே லயகாரணத்வ ரூபமான லக்ஷணம் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு ஜந்ம காரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக்கொடுத்தே தீரும். ஆகவிப்படி லக்ஷண பேதங்களினால் ப்ரஹ்ம பஹுத்வம் தேறியே தீரும். இதற்காகப் பல லக்ஷணங்களைக் கொள்ளாமல் "ஜந்ம காரணத்வே ஸதி ஸ்திதி காரணத்வே ஸதி லயகாரணத்வம் ப்ரஹ்ம லக்ஷணம்" என்று கொள்ளுகிறோமென்னில்; இவற்றுள் ஒவ்வொன்றே லக்ஷணமாகப் போருமாதலால் மற்ற விசேஷணங்கள் வ்யர்த்தமாக வேண்டிவரும். மேலும் ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் விருத்தங்களாகையாலே ஓரிடத்தில் இவை கூடியிருக்கவும் மாட்டா.

இதற்குமேல் ஒன்று சொல்லலாம். [அதோ பக்ஷி உட்கார்ந்து கொண்டிருக்கிறதே; அவ்விடந்தான் தேவதத்தனுடைய கழனி] என்று ஒருவன் சொன்னால், தேவதத்தனுடைய கழனிக்கு பக்ஷியின் ஸம்பந்தத்தை லக்ஷணமாகச் சொன்னதாக ஆகிறது. இப்படிப்பட்ட லக்ஷணத்தினால் பக்ஷி யுறையுமிடமான கழனியில் தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப்படுகிறது. அதுபோலவே இங்கும் ஜந்ம காரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வம் ஆகிற மூன்றையும் ஜ்ஞாபக லக்ஷணங்களாகக்கொண்டு இவற்றால்

ஒரே வஸ்து ப்ரஹ்ம பதார்த்த மாகத் தெரிவிக்கப்படுகிறது என்னலாம்.

இதுவும் பொருந்தாது. த்ருஷ்டாந்தத்தில், கழுகு வென்கிற வொரு வஸ்து ஏற்கனவே அறியப்பட்டிருந்தது. அப்படி அறியப் பட்டிருந்தவதில் பக்ஷி விசேஷத்தின் ஸம்பந்தத்தையிட்டு தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப் பட்டது. அதுபோல இங்கும் தெரிவிக்கப்படவேண்டி. ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்தவொரு தன்மை சொல்லித்திரவேண்டும். அதுவே ஒன்றும் சொல்ல முடியாததாயிருக்கின்றது. ஆகவே ஜந்ம காரணத்வம் முதலியவற்றுக்கு (பக்ஷிவிசேஷ ஸம்பந்தாதிவத்) ஜ்ஞாபகத்வமும் ஸம்பவிக்கமாட்டாது என்ன வேண்டியதாகும்.

ஏன்? ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்ததொரு தன்மை சொல்லமுடியாதா என்ன? நன்றாகச் சொல்லலாமே. "ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்தில் சொல்லப்பட்ட ஸத்யத்வம் முதலானவையே முன்னமறிந்த தன்மைகள் என்னக்கூடாதோ வென்னில்; அங்கும் இந்த தோஷம் ஸமானமேயாகும். ஸத்யத்வாதிகள் ஜ்ஞாபகமாகும்போது ஏற்கெனவேயறிந்த தன்மையொன்று சொல்லியாகவேண்டும். ஜந்ம காரணத்வாதிகளைச் சொல்லுகிறோமென்ன வேணும் அதைத் தெரிந்துகொள்ளாமல் ப்ரஹ்மபதார்த்தம் தெரிவிக்க முடியாததலால் அந்யோந்யாச்ரயம் அபரிஹார்யமாகும். ஆகவே ஜந்ம காரணத்வாதிகள் லக்ஷணமாகப் பொருந்த மாட்டாவென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது.

(தொடரும்)

# ந ஞ் சீ ய ர்

**தாத்தா :** என்ன குழந்தைகளே? என்னவோ தர்க்கம் (வாக்கு வாதம்) பண்ணிக் கொண்டே வருகிறீர்களே

**கண்ணன் :** இந்த மாதம் அவதரித்தது மதுரகவி யாழ்வார் தானே தாத்தா? இந்த மாதம் எந்த ஆழ்வாரும் அவதரிக்கவில்லை என்று நாராயணன் சொல்கிறான்; எது உண்மை தாத்தா?

**தாத்தா :** நாராயணன் சொன்னது தான் உண்மை. இந்த மாதம் ஆசாரியரான நஞ்சீயர் மட்டுமே அவதரித்தார். வேறு எந்த ஆழ்வாரும் அவதரிக்கவில்லை. பங்குனி

ஆ மி கா

உத்திரத் திருநாளிலே அவதரித்த இவரது இயற்பெயர் மாதவாசார்யர் என்பது. இவர் அத்வைத வித்வான்களில் தலைசிறந்தவராய் இருந்தார். 'வேதாந்தி' என்பது இவர்க்குரிய சிறப்புத் திருநாமம். பல வித்வான்களைத் திருத்திப் பணி கொண்ட எம்பெருமானார் இவரையும் திருத்திப் பணி கொள்ள விரும்பினார்.

**ஸ்ரீதேவி :** உடையவரா தாத்தா? அவரே நேரில் வந்து திருத்திப் பணி கொண்டாரா?

**தாத்தா :** இல்லை. அவர் கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டரிடம் 'மேல் நாட்டிலுள்ள வேதாந்தியைத் திருத்திப் பணிகொள்ள வேண்டும்' என்று நியமித்தருளினர். பட்டரும் அதற்குரிய சமயத்தை எதிர் நோக்கியிருந்தார். எம்பெருமானர் நியமனப்படி பட்டர் அவரை திருத்திப் பணி கொள்வதற்காக, மேல்நாட்டிற்கு பயணமானுர். அவர், காவிரி நதிக் கரையிலுள்ள சிறுப்புத்தூர் அருகில் சென்ருர்.

**நாராயணன் :** ஒரு சந்தேகம் தாத்தா. மேல் நாடு என்பது அமெரிக்காவா? ஆப்பிரிக்காவா?]

**தாத்தா :** நல்ல கேள்வி கேட்டாய்! மேல்நாடு என்பது அமெரிக்காவுமில்லை, ஆப்பிரிக்காவுமில்லை. மைசூர், திருநாராயணபுரம் [முதலியவற்றுக்கு (நமக்கு மேற்கில் இருப்பதால்) மேல்நாடு என்று பெயர். மீதி கதையை கேள், சிறுப்புத்தூருக்கு அருகில் வந்திருந்த திருமலை அனந்தாழ்வான் அவர் வந்த காரணம் அறிந்து அவரை வேதாந்தியிருந்த ஊருக்கு அழைத்துப் போனுர். பட்டர் பல்லக்கிலே வாத்தியங்கள் முழங்க வருவதைக் கண்ட அவ்வூர் மக்கள் ''நீர் யார்?'' எனக் கேட்டனர்.

**கண்ணன் :** அச்சச்சோ! தான் யாரென்பதை பட்டர் விட்டாரா தாத்தா?

**தாத்தா :** அதற்கு நீ ஏன் பயப்படுகிருய்? சொன்னுல் என்ன தப்பு? பட்டரும் 'யாம் இராமாநுசனடியார்; வேதாந்திகளோடு வாக்குவாதம் செய்யப்போகிறோம்' என்று கூறினர். அதற்கு அவர்கள் 'இவ்வளவு ஆடம்பரத்துடன் சென்ருல் நீர் வேதாந்தியைக் காண இயலாது, அவரது சீடர்கள் உம்மோடு நாலாறு மாதம் வாதம் செய்து உம்மைப் புறக்கணித்து விடுவர். ஆகையால் நீர்

பரிவாரங்களைத் துறந்து மற்ற பிராம்மணர்களோடு சேர்ந்து உணவு சாலைக்குச் சென்றால் அவரைக் காண முடியும்' என்று கூறினர்.

**ஸ்ரீதேவி :** அவ்வளவு பெரும் புகழ் படைத்த பட்டர் அப்படியெல்லாம் போவாரா தாத்தா?

**தாத்தா :** எம்பெருமானார் கட்டளைப்படி வேதாந்தியைத் திருத்தி நமது ஸம்ப்ரதாயத்திற்கு அவரைக் கொணர்வதற்கு பட்டர் எதையும் செய்யத்தயாராயிருந்தார். தம் பரிவாரங்களையெல்லாம் வெளியே நிறுத்தினர். போஜன சாலைக்குச் சென்று தன்னந் தனியாக நின்று கொண்டிருந்தார். அதைப் பார்த்த வேதாந்தி 'ஏன இங்கு நிற்கிறீர்கள்?' என்று கேட்டார். பட்டரும் பிக்ஷைக்கு வந்திருப்பதாகக் கூறினர் உடனே வேதாந்தி போஜன (உணவு) சாலையைச் சுட்டிக் காட்டினர். பட்டரோ 'சோற்றுப் பிக்ஷை எனக்கு வேண்டியதில்லை' என்று கூறினர்.

**நாராயணன் :** வேதாந்திக்கு வந்திருப்பது பட்டர் என்று தெரியாதா தாத்தா?

**தாத்தா:** ஊகூம். முதலில் தெரியாது. பிறகு வேதாந்தி 'என்ன பிக்ஷை வேண்டும்?' என வினவினர். அதற்கு பட்டர் 'தர்க்க பிக்ஷை' என்று கூறினர். அதைக் கேட்ட வேதாந்தி, ஒரு தீர்த்தவாசி பிராம்மணன் பட்டரைப் பற்றிச் சொன்னதையெல்லாம் மனதிற் கொண்டு 'நீர் பட்டரோ?' என வினவினர். பட்டரும் 'ஆம்' என்று கூற, இருவருக்கும் வாதப் போர் தொடங்கிற்று.

**கண்ணன் :** கடைசியில் யார் வெற்றி பெற்றார் தாத்தா?

**தாத்தா :** இந்த வாதப் போர் ஒன்பது நாள் தொடர்ந்து நடந்தது. இறுதியில் பட்டர் விசிஷ்டாத்வைத உண்மைகளை திருநெடுந்தாண்டகம் எனும் திவ்ய ப்ரபந்தத்தின் உதவிகொண்டு விளக்கினர். அதைக் கேட்ட

வேதாந்தி 'உம்மை இதுவரையில் மனிதன் என்றே நினைத்திருந்தேன். உமக்கும் பெருமாளுக்கும் வித்தியாசமில்லை. உறங்கும் பெருமாள் அவர் என்றால், உலாவும் பெருமாள் நீர்' என்று பட்டர் திருவடிகளில் விழுந்து அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவரை ஏற்றுக் கொண்டு பஞ்சஸம்ஸ்காரங்களையும், பல சாஸ்திரங்களையும் உபதேசித்து திருத்திப் பணி கொண்டார்.

**ஸ்ரீதேவி :** அவருக்கு 'நஞ்சீயர்' என்ற பெயர் எப்படி வந்தது, தாத்தா?

**தாத்தா :** நானே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அதற்குள் நீயே கேட்டுவிட்டாய். பட்டர் திருத்திப்பணி கொண்ட பிறகு மேல் நாட்டிலேயே திருமாலடியார்களைப் பூஜித்து வந்தார். அப்படியிருக்கையில், ஒருநாள் இரண்டு வைஷ்ணவர்கள் மிகவும் களைத்துப் போய் வேதாந்திகளின் திருமாளிகைக்கு எழுந்தருளினர். அப்போது வேதாந்தி அங்கு இல்லை. வேதாந்தியின் தேவிகளிடத்தில் 'மிகவும் பசியாயிருக்கிறது' என்று கூறினர். அதற்கு வேதாந்தியின் இரு தேவிகளும் 'உங்கள் வேதாந்தி நீர்த்தமாட (குளிக்க) போயிருக்கிறார். இங்கே ஒன்றும் இல்லை. அங்கே போங்கோள்' என்று கூறிவிட்டனர்.

**நாராயணன் :** அய்யோ பாவம் தாத்தா! அவர்கள் அதனை வேதாந்தியிடம் சொல்லவில்லையா?

**தாத்தா :** ஆம், அவர்கள் அதனை வேதாந்தியிடம் சொல்லி விட்டனர். அதனால் கோபங்கொண்ட வேதாந்தி திருமாளிகைக்கு எழுந்தருளி தேவிகளிருவரையும் சீறிவிட்டு தம்முடைய சொத்தை மூன்று பாகமாக்கினார். அதில் இரு பகுதியை இரு தேவிகளுக்கும் கொடுத்துவிட்டு, மற்றொரு பகுதியை பட்டருக்குக் கொடுப்பதற்காக, புறப்பட்டு விட்டார். இவர் தம்முடைய இரு தேவிமார்களின் செயலினால் மனம் வருந்தி இல்லற வாழ்வில் வெறுப்பு கொண்டார். அதனால் சந்நியாசத்தை மேற் கொண்டார்.

**கண்ணன் :** நஞ்சீயர் என்று ஏன் வந்தது என்பதைச் சொல்லாமல் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே தாத்தா?

**தாத்தா :** அதைத் தான் சொல்ல வந்தேன். அவர் பட்டரின் திருவடி நிழலில் காலம் கழிக்க எண்ணி ஸ்ரீ ரங்கத்திற்குச் சென்று பட்டரின் திருவடியில் வேரற்ற மரம் போல் விழுந்தார். அதைக் கண்ட பட்டர் 'நம்முடைய சீயர் வந்தார்' என்று அவரை வாரியணைத்துக் கொண்டார். அந்த நாள் முதல் வேதாந்திக்கு 'நஞ்சீயர்' என்ற திருநாமம் வழங்கலாயிற்று.

**நாராயணன் :** அப்படியானால் அவர் பட்டரிடமே தங்கி விட்டாரா தாத்தா?

**தாத்தா:** ஆம். அவருடைய குருபக்தியைக் கூறுகிறேன். கேளுங்கள். நஞ்சீயர் தமது குருநாதரான பட்டரிடம் மிகுந்த விசுவாசமுள்ளவர். ஒருநாள் கைசிக துவாதசியன்று பட்டர் வீதியில் பல்லக்கில் எழுந்தருள, நஞ்சீயர் பல்லக்கைத் தூக்குவதற்கு முன் வந்தார். அதற்கு பட்டர் 'சந்நியாசியான நீர் இது செய்யத் தகாது' என்று தடுத்தார். உடனே நஞ்சீயரும் 'நான் ஸ்ரீபாதம் தாங்க (பல்லக்கைத் தூக்க) இந்த சந்நியாசம் இடையூறாக இருந்தால் பழைய வெள்ளையுடையையே உடுக்கிறேன்' என்று கூறினார். அவ்வளவு குரு பக்தி.

**ஸ்ரீதேவி :** இவருக்கு சீடர்கள் யாரும் கிடையாதா தாத்தா?

**தாத்தா :** ஏன் இல்லை? நம்பிள்ளை இவருடைய சீடர் தான் அவரைத் தவிர இவருக்கு 'பெற்றி' என்றொரு சீடரும் இருந்தார். நஞ்சீயர் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த போது அவரைக் காண 'பெற்றி' வந்தார். அவருடைய அந்திம காலம் நெருங்கி விட்டதென்று நினைத்து 'தேவரீருக்கு ஏதேனும் விருப்பமிருந்தால் அதனை தெரிவிக்க வேண்டும்,

என்று கேட்டார். அதற்கு நஞ்சியரும் இரண்டு விருப்பங்களை வெளியிட்டார்.

**கண்ணன் :** அந்த இரண்டு விருப்பங்கள் என்ன தாத்தா?

**தாத்தா :** அதாவது (1) 'தூவிரிய மலருழக்கி' என்று தொடங்கும் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி திருவாலிப் பதிகத்தை அரையர் சேவிக்கக் கேட்கவேண்டும். (2) நம்பெருமாள் எழுந்தருளும்போது முன்னழகும், பின்னழகும் சேவிக்க வேண்டும் என்று கூறினர். அவருடைய விருப்பப்படியே அருகில் இருந்தவர்கள் அரையரை வரவழைத்து திருவாலிப் பதிகத்தை பாட ஏற்பாடு செய்தனர். அரையரும் "தாளுக நினையானே தன் நினைந்து நைவேற்கு ஓர் மீன் ஆய கொடி நெடுவேள் வலி செய்ய மெலிவ ? தேன் வாய வரி வண்டே! திருவாலி நகர் ரும் ஆன் ஆயற்கு என் உறுநோய் அறியச் சென்று உரையாயே என்று பாடியபோதே நஞ்சீயர் பரவசமாகி மோகித்து விழுந்தார்.

**நாராயணன் :** இவர் எந்த திவ்ய பிரபந்தங்களையும் பாடவில்லையா தாத்தா?

**தாத்தா :** என்ன அசட்டுத்தனமான கேள்வி கேட்கிறாய்? ஆழ்வார்களால் பாடப்பெற்றது மட்டுமே 'நாலாயிர திவ்யப்ரபந்தம்' என்பது தெரியாதா? இவர் ஆசாரியர் தானே? நான் முன்பே ஆழ்வார்கள் வேறு, ஆசாரியர்கள் வேறு என்று கூறவில்லையா? ஆழ்வார்களால் பாடப் பெற்ற திவ்ய ப்ரபந்தங்களுக்கு வியாக்கியானம் செய்தருளியவர்களே ஆசாரியர்கள். இவர் திருவாய்மொழிப் பொருளை ஆராய்ந்து அருளிச் செய்த வியாக்கியானம் "ஒன்பதினாயிரப்படி" நஞ்சீயரைப் போலவே நீங்களும் குருவிடம் (ஆசிரியரிடம்) பணிவு கொண்டு நல்ல புகழை அடைவீர்களாக! ★

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

# அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின்

## துன்மதி வருஷத்திய மீனவிசாகோத்ஸவ பத்திரிகை



ஸ்ரீஸ்வாமியின் 91வது திருநக்ஷத்ர பூர்த்தியை முன்னிட்டு ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீஸ்வாமி திருமாளிகையில் நாளது பங்குனி மீ 20உ (2—4—82) வெள்ளிக்கிழமை முதல் பங்குனி மீ 29உ (11—4—82) ஞாயிற்றுக் கிழமை வரை வேதபாராயணம், திவ்யப்ரபந்த ஸேவை, ரஹஸ்யாநுஸந்தானம், ஸ்தோத்ரபாடம், வித்வான்களின் உபந்யாஸங்கள் இவை நடைபெறும். ஆஸ்திகர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடத்தி வைக்கும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

இங்ஙனம்
ப்ரதிவாதி பயங்கரம்
செல்வாமணி என்கிற
ரங்கநாத தாஸன்

காஞ்சீபுரம்
1—3—82

# ஆழ்வாருடை மூகாம்பிகை ஸ்தலம் தெரியுமா?

இன்று பத்திரிகை அரசியல் உலகில் பிரபலமாக அடிபடும் மூகாம்பிகை ஸ்தலம் நம்பிள்ளை காலத்திலேயே புகழ் பெற்றிருந்தது. மூகாம்பிகையை வணங்கினால் ஊமையும் வாய்திறந்து பேசுமாம்! மறந்தும் புறந்தொழா மாந்தர்களான வைஷ்ணவர்கள் மூகாம்பிகையை வழிபடுவதில்லை என்பது வேறு விஷயம். நம்மாழ்வார் பிறந்தது முதலாக வாய்திறவாது ஊமையோ என்று பிறர் சந்தேகப்படும்படி தியானத்தில் ஊன்றியிருந்தார். அவரை வாய்திறந்து பேசச் செய்து பாசுரங்களையும் பாடச் செய்தவர் திருமாலிருஞ் சோலை அழகர். 'யானாய்த் தன்னைத் தான் பாடித் தென்னா வென்னும் என்னம்மான் திருமாலிருஞ் சோலையானே' என்று இவ்வுண்மையை ஆழ்வாரே வெளிப்படுத்துகிறார். இதனை உணர்த்த விரும்பிய நம்பிள்ளை 'ஆழ்வாரைப் பாடுவித்த மூக் கோட்டையிறே' என்று திருமாலிருஞ் சோலையைக் குறிப்பிடுகிறார். 'மூககோட்டம்' என்பது மூக்கோட்டை என்று அக்காலத்தில் மருவி வழங்கியது போலும். இது மலையாள தேசத்திலுள்ளதாக அரும்பதக்காரர்கள் எழுதி வைத்துள்ளார்கள். ஆனால் இன்று கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்ததாக விளங்குகிறது. இதேபோல், திருமங்கையாழ்வாருடைய மூக்கோட்டையாகத் திருக்கண்ணபுரத்தைக் காட்டியிருக்கிறார் நம்பிள்ளை (ஆதாரம்— திருவாய்மொழி ஈடு : 4-5-2, 10-7.5.)

— அரங்கராஜன்

# ஸுதர்சனர் பதில்

**32. கரணத்ரயம் என்றால் என்ன?**

மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களும் கரண த்ரயம் ஆகும்.

**33. காலத்ரயம் என்றால் என்ன?**

சென்ற காலம், வருங்காலம், நிகழ்காலம் என்னும் மூவகைக் காலங்களும் காலத்ரயமாகும்.

---

ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
ஸுதர்சனம் ஆசிரியர்
8, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

---

**34. கர்மத்ரயம் என்றால் என்ன?**

மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களின் கார்ய மான நினைக்கை, சொல்லுகை, ;செய்கை என்னும் மூன்றும் கர்மத்ரயம் ஆகும்.

**35. அசித் த்ரயம் என்றால் என்ன?**

மூலப்ரக்ருதியாகிற அவ்யக்தம், அதன் கார்யமான வ்யக்தமான அசித்தத்வங்கள், காலம் ஆகிய மூன்றும் அசித் த்ரயம் ஆகும்.

**36. குணத்ரயம் என்றால் என்ன?**

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்றும் குணத்ரயம் ஆகும்.

**37. ஆசாத்ரயம் என்றால் என்ன?**

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்றும் ஆசாத்ரயம் எனப்படும்.

**38. அபராதத்ரயம் என்றால் என்ன?**

எம்பெருமான் திறத்தில் அபசாரமாகிற பகவதபசாரம் அவனடியார்கள் திறத்து அபசாரமாகிற பாகவதாபசாரம் அவர்கள் இருவர் திறத்திலும் காரணமில்லாமலே அபசாரபடுமதாகிற அஸஹ்யாபசாரம் ஆகிய மூன்றும் அபராதத்ரயம் எனப்படும்.

**39 ஈஷணாத்ரயம் என்றால் என்ன?**

அர்த்தேஷணை (பணத்தில் ஆசை), தாரேஷணை (மனைவியிடம் ஆசை) புத்ரேஷணை (பிள்ளையிடம் ஆசை) ஆகிய மூன்றும் ஈஷணாத்ரயம் ஆகும்.

**40. தத்வத்ரயம் என்றால் என்ன?**

சித், அசித், ஈச்வரன் ஆகிய மூன்றும் தத்வத்ரயம் ஆகும். 8வது கேள்வி பதிலில் இது விளக்கப்பட்டுள்ளது.

**41. தாபத்ரயம் என்றால் என்ன?**

ஆத்யாத்மிகம் (ஆத்மா எனப்படும் சரீரத்தில் உண்டாகும் நோய் முதலானவை), ஆதிதைவிகம் (தெய்வச் செயலான இடி முதலானவற்றால் ஏற்படுமவை, ஆதிபௌதிகம் (பஞ்ச பூதங்களால் ஏற்படுமவை) என்னும் மூன்று தாபங்களும் (வருத்துமவை) தாபத்ரயம் எனப்படும்.

**41. தேவதாத்ரயம் என்றால் என்ன?**

பரம்பொருளான நாரணனுடைய அடியார்களான தேவதைகளின் தலைவர்களான பிரமன், உருத்திரன், இந்திரன் ஆகிய மூவரும் தேவதாத்ரயம் எனப்படுவர்.

**43. மஹிஷீத்ரயம் என்றால் என்ன?**

பரமபதத்தில் ஆதிசேஷனாகிற சிரியசிங்காசனத்தில் எம்பெருமானோடு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பூமி நீளா தேவிகளாகிற மூவரும் மஹிஷீத்ரயமாவர்.

**44. ஆத்மத்ரயம் என்றால் என்ன?**

நித்யர், முக்தர், பத்தர் என்னும் மூவகை ஜீவாத்மாக்களும் ஆத்மத்ரயம் எனப்படுவர். 11வது கேள்விபதிலில் இது விவரிக்கப் பட்டுள்ளது.

**45. பரிச்சேதத்ரயம் என்றால் என்ன?**

காலத்தால் அளவு பட்டிருக்கை, தேசத்தால் அளவு பட்டிருக்கை,வஸ்துவால் அளவுபட்டிருக்கை என்னும் மூன்று விதமான பரிச்சேதங்களும் (அளவுகளும்) பரிச்சேதத்ரயமாகும். இந்த மூன்று வகைப்பட்ட அளவுகளும் இல்லாதவன் எம்பெருமான் ஒருவனே

**46. காரணத்ரயம் என்றால் என்ன?**

குடத்துக்கு குயவன் போலே ஒரு பொருளைச் செய்பவன் நிமித்த காரணமாவான். மண்குடத்துக்கு மண்போலே, அப்பொருள் எதிலிருந்து செய்யப்படுகிறதோ அது உபாதான காரணமாகும். குயவன் மண்குடத்தைச் செய்யும் போது அவனுக்கு உதவி புரியும் தண்டம், சக்கரம் முதலானவை போலே, நிமித்த காரணமாயிருப்பவனுக்கு அப்பொருளைச் செய்ய உதவும் பொருள்கள் ஸஹகாரிகாரணமாகும். நிமித்தம், உபாதானம், ஸஹகாரி என்னும் மூன்றுமே காரணத்ரயமாகும். உலகிற்கு இந்த மூவகைக் காரணமாகவும் இருப்பவன் எம்பெருமான்.

**47. விரோதித்ரயம் என்றால் என்ன?**

தனக்குத்தானே தலைவன் என்னும் நினைவாகிற ஸ்வாதந்த்ரியம், பிரமன் உருத்திரன் முதலானோர்க்கு தான்

அடிமைப்பட்டவன் என்னும் நினைவாகிற அந்யசேஷத்வம், தேஹமே தான் என்னும் நினைவாகிற தேஹாத்மாபிமானம் என்னும் மூன்று நினைவுகளும் எம்பெருமானை அடைவதற்கு விரோதிகள் (தடைகள்). ஆகையால் இவை விரோதித்ரயம் எனப்படும்.

**48. ஸுக்ருதத்ரயம் என்றால் என்ன?**

ஸ்ரீவசனபூஷணம் 381-வது ஸூர்ணையின் வியாக்யானத்தில் விவரிக்கப்பட்ட ஆநுஷங்கிகம், ப்ராஸங்கிகம், யாத்ருச்சிகம் என்னும் மூன்று வகைப்பட்ட ஸுக்ருதங்களும் (புண்ணியங்களும்) ஸுக்ருதத்ரயம் எனப்படும்.

**49. ஆநுகூல்யத்ரயம் என்றால் என்ன?**

எம்பெருமான் விஷயத்தில் (1) அத்வேஷம் எனப்படும் த்வேஷமின்மை, (2) ஆபிமுக்யம் எனப்படும் ஈடுபாடு, (5) அவனடியார்களோடு பேசிப் போதுபோக்குகையாகிற ஸத்ஸம்பாஷணம் ஆகிய மூன்றும் ஆநுகூல்யத்ரயம் எனப்படும்.

**50. அநுவர்த்தநத்ரயம் என்றால் என்ன?**

ஆசார்யன் விஷயத்தில் (1) சரீரம், (2) பொருள், (3) உயிர் என்னும் மூன்றையும் ஸமர்ப்பிக்கை அநுவர்த்தநத்ரயம் எனப்படும்.

**51. அதிகாரத்ரயம் என்றால் என்ன?**

(1) நல்ல கேள்வி ஞானம் உடையவனாகை, (2) வயது முதிர்ந்தவனாயிருக்கை, (3) வேதார்த்தம் அறிந்தவனாயிருக்கை என்று ஆசார்யனுக்கு இருக்க வேண்டிய மூவகையான அதிகாரங்களும் (தகுதிகளும்) அதிகாரத்ரயம் எனப்படும்.

(தொடரும்)